விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 212 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 03 புதன்கிழமை (19.07.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829



கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே


## புதிய பயங்கரவாத சட்டம் திருத்தங்களுடன் சமர்ப்பிக்கப்படும்

### தமிழ்ப் பிரதிநிதிகளுடனான சந்திப்பில் ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

புதிய பயங்கரவாதத் திருத்தச் சட்டம் உரிய திருத்தங்களுடன் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளார்.

தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் நேற்று இடம்பெற்ற சந்திப் 15



## அரசியல் தீர்வு தொடர்பில் வாய்திறக்காத ரணில்

(கொழும்பு)

தமிழ் எம்.பிக்களுடனான சந்திப்பில் அரசியல் தீர்வு தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எந்தவிதமான கருத்துக்களையும் முன்வைக்கவில்லை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வடக்கு, கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களை நேற்று பாராளுமன்றத்தில் சந்தித்து கலந்துரையாடியிருந்தார். 15

### பாராளுமன்றில் அனைத்து கட்சித் தலைவர்களும் ஏற்றால்

# 13வது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுலாக்கலாம்

## தமிழ் எம்.பிக்களிடம் ஜனாதிபதி ரணில்

- தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வு முன்வைக்கப்பட்டுள்ளது.
- பாராளுமன்றில் பெரும்பான்மை கிடைத்தால் காணி, பொலிஸ் அதிகாரம் வழங்க முடியும்.

(04ஆம் பக்கம் பார்க்க)



### 21ஆம் திகதி

## ஜனாதிபதி ரணில் இந்தியா விஜயம்

### உத்தியோகபூர்வ அறிவிப்பு

(கொழும்பு)

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் அழைப்பை ஏற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாளை மறுதினம் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இந்தியாவிற்கான விஜயத்தை மேற் 15

### யாழ்.பல்கலையின்

## பட்டமளிப்பு விழா இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் 37ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் முதலாவது பகுதி, இன்று புதன்கிழமை 19ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து 20 மற்றும் 21 ஆம் திகதி 15

## தமிழ்க் கட்சிகளின் கடிதத்துக்கு இந்தியா அழுத்தம் கொடுத்தால்

### இராஜதந்திர ரீதியில் ஜனாதிபதி பதிலளிப்பார் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவிப்பு



(கொழும்பு)

தமிழ்க் கட்சிகளின் கடிதம் தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு, இந்திய அரசாங்கம் அழுத்தம் விடுத்தால், அதற்கு இராஜதந்திர ரீதியான பதிலை ஜனாதிபதி வழங்குவார் என்று அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார். 15

### ஜனாதிபதியின் பொது மன்னிப்பில்

## இரு தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பொது மன்னிப்பின் கீழ் மேலும் இரு தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதாகி, ஆயுள் தண்டனை பெற்று 15 வருடங்களுக்கு மேல் சிறையில் அடைக்கப்பட்டிருந்த, சாவகச்சேரி மிருசுவிலைச் சேர்ந்த 15

### அச்சுவேலியில்

## பெற்றோல் குண்டுத் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி பத்தமேனியிலுள்ள வீடு ஒன்று நேற்றிரவு 9.20 மணியளவில் பெற்றோல் குண்டு 15

## முல்லையில் நீரில் மூழ்கி இளைஞன் உயிரிழப்பு

### தாமரை பறிக்கச் சென்றபோது விபரீதம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு தாமரைக் குளம் ஏரியில் தாமரை பறிக்க படகில் பயணித்த இளைஞர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தில் முல்லைத் தீவைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞரே உயிரிழந்துள்ளார்.

தாமரை பூ பறிக்க இருவர் படகில் பயணித்த போது படகில் இருந் 15

## பலாலி விமான நிலைய வரிச்சலுகை நீடிப்பு

### அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்திற்கான (பலாலி) வரியை மேலும் ஆறு மாத காலத்துக்கு நீடிக்க அரசாங்கம் ஒப்புதல் அளித்துள்ளது.

வாராந்த அமைச்சரவை மாநாட்டில் நேற்று உரையாற்றிய அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்த்தன இந்த 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## ஆனந்தபுரம், கிளிநொச்சி

## திருவருள்மிகு ஸ்ரீ ஜெயதுர்க்கை அம்பாள் திருக்கோவில்

# சித்திரத் தேர் வெள்ளோட்டம்

### ஆலய பிரதம குரு அவர்களின் ஆசிச் செய்தி



இந்துமா சமுத்திரத்தின் முத்தெனத் திகழும் இலங்கைத் திருநாட்டின் வடக்கே சைவத் தமிழும் பண்பாடும் தன்னகத்தே கொண்ட வயலும் வயல் சார்ந்த நிலமாகிய (செந் நெல் களனிகள் ) கிளிநொச்சி ஆனந்தபுரம் மேற்கு பகுதியில் வீற்றிருந்து அருள் பாலிக்கும் அருள்மிகு ஸ்ரீ ஜெயதுர்க்கை அம்மன் ஆலயத்தில் 12.07.2023ல் கொடியேற்றத்துடன் பிரமோற்சவ விழா ஆரம்பமாகி நடைபெற்றுக் கொண்டிருக்கும் திருவிழாவில் இம்முறை புதிய சித்திரத் தேரும் ஓடுவதற்காக அம்பாள் அருள் பாலித்துள்ளமை ஆலயத்தை சூழவுள்ள அடியவர்களுக்கு கிடைத்த பெரும் பேறாகும்.அந்த வகையில் புதிய சித்திரத் தேர் வெள்ளோட்டம் 19.07.2023 காலை 10.30 மணியளவில் நடைபெறவிருப்பது அடியேன், அடியவர்களுக்கு 2021ம் ஆண்டு திருவிழாவில் இனிவரும் காலங்களில் இவ் வீதியில் தேர் ஓட வேண்டும் என்ற கருத்தை அடியவர்கள் மனதிலெடுத்து இம்முறை புதிய தேர் அமைத்து வெள்ளோட்டம் காண இருப்பதையிட்டு மனநிறைவடைந்து அனைவருக்கும் நல்லாசிகள் கிடைக்க வேண்டும் என்று அம்பாளை வேண்டி நிற்கின்றேன். தொடர்ந்து ஆலயத்திருப்பணிக்கு நிதி, பொருள்,சரீர உதவிகள் வழங்கிய அனைத்து அடியவர்களுக்கும் ஸ்ரீ ஜெயதுர்க்கை அம்பாளின் நல்லருள் கிடைக்க வேண்டும் என்று நல்லாசிகள் வழங்குகின்றேன்.

மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெலாம்

ஆலய பிரதம குரு
முத்தமிழ் குருமணி,சிவஞான வாரிதி
சாம ஸ்ரீ தேச கீர்த்தி தத்துவ கலாநிதி
தற்புருஷ சிவாச்சாரியார் சிவஸ்ரீ அமிர்தகாந்தக் குருக்கள்
ஸ்ரீவித்தியா பீடம், கிளிநொச்சி



### ஆனந்தபுரம் ஸ்ரீ ஜெயதுர்க்கை அம்பாள் ஆலய சித்திரத்தேர் வெள்ளோட்டமும் சிறப்பு மலர் வெளியீடும் 19.07.2023.



**ஆசியுரை**

*புண்ணியச் செயலில் ஈடுபடுபவர்கள் புண்ணியவான்களாவர்.*

பசு புண்ணியம் பதி புண்ணியம் என இருவகைப்படும். மேலான புண்ணியங்களில் பதி புண்ணியமே மிக மிகச் சிறந்தது. பதி புண்ணியம் எனும்போது அது தெய்வங்களுக்குச் செய்யும் உத்தம யாகமாகவும் மாறுகிறது. அறப் பணியாக உருவாகும் பதி புண்ணியங்களுள் இறைவனுக்கு திருத்தேர் செய்வதும் அடங்கும்.

இத்தேரினை நிறுவும் சிற்பிகள் பூசுரம் வரிசையில் இடம் பெறுகிறார்கள். அதனால் அவர்களுக்கும் "ஆச்சார்யர்" பட்டாபிஷேகம் நடைபெறுகிறது.

தேர்கள் செய்வதாயின் அதற்கு தனியான கலைப் பயிற்சி, புத்திக் கூர்மை, சாமர்த்தியம், அஷ்டாவதானம், ஒழுக்கம் என்பன நிறைய வேண்டும். இப்படியான நற் குணங்களைக் கொண்ட சிற்பிகள் உருவாக்கும் தேரினை தேரோட்டம் விடப்படும் போது ஒற்றுமை, சமத்துவம், சகோதரத்துவம், விடாமுயற்சி, பேரானந்தம் என்பனவும் மக்களிடையே தோன்றுகின்றன.

இதனால் நாடு சுபீட்சமடையும். ஆகவே தேர்ச் சிற்பிகளின் மகத்துவம் எத்தகையதென்பதை உணரமுடியும்.

"மகாரதம்" பிரபஞ்சத்தின் சின்னமாகிறது. இறைவன் அதன் நாயகனாக இருந்து உலகை நடப்பிக்கின்றான் என்பதுதான் தத்துவம். தேரின் பீடங்கள் மந்திர, தந்திர, சாத்திர அடிப்படையில் பல்வேறு கோணங்களில் அமைகின்றன. ஊர்ந்து செல்லும் சக்கரத்தில் இருந்து உச்சியில் பிரதிஷ்டை செய்யப்பட்ட கலசம் வரை கவனமாகப் பார்த்து சிந்திப்பின் அது ஒரு திருக்கோவில் போன்று வடிவினைத் தரும்.

ஆகவே தெய்வம் தேரேறி வரும்போது திருக் கோவிலே உலாவருகிற காட்சியைத் தருவதாக அமைகின்றன. ஊர்ந்து செல்லும் சக்கரத்தில் இருந்து உச்சியில் பிரதிஷ்டை செய்யப்பட்ட கலசம் வரை கவனமாகப் பார்த்து சிந்திப்பின் அது ஒரு திருக்கோவில் போன்று வடிவினைத் தரும். ஆகவே தெய்வம் தேரேறி வரும்போது திருக் கோவிலே உலாவருகிற காட்சியைத் தருகிறது.

தேரிலே முதற்படியாக பூவுலக வாழ்க்கையும் அடுத்தபடியாக தேவலோக வாழ்க்கையும் தொடர்ந்து சுவர்க்கலோக வாழ்க்கைச் சிறப்புகளும் என்றபடியும் சிற்பநூல்களின்படி பார்விதானம், உபபீடம் அதிஷ்டானம், பேரூர் மட்டம் நாராசனம் தேவா்சனம், சிம்மாசனம் என்றும் நிறுவப்படுகிறது.

பற்பல வடிவங்களைக் கொண்ட தேர்கள் பல பெயர்களினால் அழைக்கப்பட்டாலும் பிரம்ம தேவரைச் சாரதியாகக் கொண்ட தேருக்கே திருத் தேர் என்றும் மனோரதம் கூறப் படுகின்றது.

ஆனந்த நகர் ஜெயதுர்க்கை அன்னைக்கு ஓர் தேர் செய்வதையான் அடிக்கடி பார்த்ததுண்டு. அழகான தேர் மிக ரம்மிய மான வேலைப்பாடு. முகோத்தரங்கள் சில புதுமாதிரி சேர்க்கப்பட்டிருக்கிறது. இதுவும் ஓர் தனியழகு. துணிந்து நின்று வெகு சாமர்த்தியமாய் இத் தேரை உருவாக்கிய ஆச்சாரிகள் அவர்களுக்கும் அவருடன் துணை நின்ற ஆலய அறங்காவலர்களும், ஆலய பக்தர்களும் போற்றுதற்குரியவர்கள்.

ஈழநாட்டுக் கலைஞர் குழாம் தலை நிமிர்ந்து நிற்கக் கூடியதாக இந் நாட்டிற்கே பெருமை தேடித் தந்துள்ளனர்

சிற்பாலயக் கலைஞர்களும் நீடூழி நிலை பெற்று அவர் தம் கலைச்சேவை நாட்டிற்கு உதவும் வகையில் திருத் தொண்டாக அமைய ஆனந்த நகர் ஜெயதுர்க்கை அன்னை நல்லருள் புரிய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றோம்.

"போற்றி எல்லா உயிர்க்கும்"

.................

சிவேந்திர சைதன்யா சின்மயா மிஷன்
கிளிநொச்சி.

### ஆனந்தபுரம் கிளிநொச்சி ஸ்ரீ துர்க்கை அம்மன் ஆலய சித்திரத் தேர் வெள்ளோட்டம்

கும்பாபிசேகம் நடைபெற்ற நாளில் இருந்து தேர் ஒன்று செய்ய வேண்டும் கொடிக்கம்பம் செய்ய வேண்டும் என்ற ஆவலில் இருந்த போது எமது ஆலய பிரதம குரு சிவஸ்ரீ அமிர்த ஸ்ரீ காந்த குருக்கள் அவர்களின் ஆலோசனையும் எங்களுக்கு கிடைத்தது.2021ம் ஆண்டு கொடியேற்ற திருவிழா செய்து தேர் செய்ய வேண்டும் என்று தீர்மானிக் கப்பட்டு ஆலய பக்த அடியார்களின் ஒத்துழைப்பினாலும் இவ்வாண்டு மகோற்சவ காலத்தில் தேர் வெள்ளோட்ட நிகழ்வு அம்பிகை அருளி னால் கைகூடியது மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகின்றது.

நன்றி
தலைவர்
செயலாளர் ஆலய பரிபாலன சபை, விழா உபயகாரர்கள்

விளம்பர அனுசரணை....

K.K.Restaurant
A/C, Non A/C Rooms
Kumarakuru Building
271, A9 Road,
Ananthapuram, Kilinochchi.

நோத் மாட்
ஹோட்டல் & றெஸ்டோரன்ட்
ஏ9 வீதி, அறிவியல் நகர்
கிளிநொச்சி.

S.T.N
ரான்ஸ்போட்
ஆனந்தபுரம், கிளிநொச்சி.

K.M.S
ரான்ஸ்போட்
ஏ9 வீதி, திருமுறிகண்டி.

S.M.S
ரான்ஸ்போட்
ஆனந்தபுரம், கிளிநொச்சி.

நோத் லங்கா
டெவலப்பஸ்
உதயநகர் கிழக்கு,
கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(16328)

# வீதியில் நாட்டப்பட்ட மரக்கன்றுகளை தீ வைத்து எரித்த விசமிகள்

(யாழ்ப்பாணம்)

**ஏ-9 நெடுஞ்சாலை, ஆனையிறவு பகுதி வீதியில் நாட்டப்பட்டிருந்த மரக்கன்றுகளுக்கு விசமிகள் தீ வைத்ததில் அவை தீயில் எரிந்து கருகியுள்ளன.**



தன்னார்வ அமைப்பொன்றினால் வீதியின் இருமருங்கிலும் நாட்டப்பட்டு பராமரிப்புச் செய்யப்பட்டு வந்த மரக்கன்றுகளில் 28 மரக்கன்றுகளுக்கே இனந்தெரியாத நபர்கள் இவ்வாறு தீ வைத்து அழித்துள்ளனர்.

இயற்கை வளங்கள் அழிவுற்று வரும் நிலையில் மனிதர்களுக்கு பல்வேறுபட்ட நோய்கள் ஏற்பட்டு வருகின்றன. அந்த நோய்த்தாக்கங்களில் இருந்து மனிதர்களை பாதுகாப்பதில் மரங்கள் அளப்பரிய பங்காற்றுகின்றன. மரங்கள் நாட்டப்பட வேண்டும் என பல்வேறு தரப்பினரும் கூறி, அதனை ஊக்குவித்து வருகின்ற நிலையில், இவ்வாறான ஒரு செயற்பாடானது மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. (4-5-104)

# நாடகமும் அரங்கியலும் பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் நாடகமும் அரங்கியலும் பாடத்தில் செய்முறைப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான பயிற்சிப் பட்டறை எதிர்வரும் 22ஆம், 23ஆம் திகதிகளில் காலை 8 மணி தொடக்கம் பி.ப.2 மணிவரை இல.286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைதூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சிப் பட்டறையில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் நாளை மறுதினம் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்பாக தமது பெயர், விபரங்களை யாழ்.திருமறைக் கலாமன்ற அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளுமாறும் மேலதிக விபரங்களுக்கு 021 222 2393, 077 639 3620 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-5)



சங்கானை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட சுழிபுரம் மேற்கு கலைமகள் விளையாட்டுக் கழகத்தினரால் கடந்த ஞாயிற்றுக்கிழமை பசுமைப் புரட்சி செயற்றிட்டம் சம்பிரதாயபூர்வமாக அங்குரார்பணம் செய்து வைக்கப்பட்டது. (படம்-சுபேசன்)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

மகாத்மாகாந்தி ஆசிரமம் அமரர் திருமதி சரசுவதி தம்பிப்பிள்ளை நினைவாக நடைமுறையில் காந்தியக் கொள்கைகள் என்னும் தலைப்பில் 18 வயது முதல் 25 வயதுடைய இளைஞர்களுக்கான கருத்தரங்கை ஒழுங்கு செய்துள்ளது.

இக் கருத்தரங்கு எதிர்வரும் 29 ஆம் திகதி யாழ்ப்பாணம் கிறீன்கிராஸ் ஹோட்டலில் காலை 9 மணி முதல் மாலை 5.30 வரை நடைபெறவுள்ளது.

இக் கருத்தரங்கிலே கலந்து கொள்பவர்களில் குறிப்பிட்ட தகுதிகள் உடைய இருவருக்குக் கல்விக்கான புலமைப்பரிசில் வழங்கப்படும்.

இக் கருத்தரங்கில் கலந்து கொள்வதற்கான விண்ணப்பப்பத்திரங்களைப் பெற mgandhiashramam@gmail.com என்னும் முகவரிக்கு மின்னஞ்சலை அனுப்பலாம். 25 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பப்படும் விண்ணப்பங்களே ஏற்றுக் கொள்ளப்படும் எனமகாத்மா காந்தி ஆசிரம தலைவர் அறிவித்துள்ளார். (4-5)

## பழைய மாணவர்களுடனான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யா/ மல்லாகம் மகா வித்தியாலய பழைய மாணவர்களுடனான விசேட கலந்துரையாடல் எதிர்வரும் 23 ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு பாடசாலையில் அதிபர் சி. கணேசராசா தலைமையில் நடைபெறவுள்ளது. (4-5)

## இசைப்புலவர் சண்முகரத்தினத்தின் நினைவு விழா

(யாழ்ப்பாணம்)

இசைப்புலவர் ந.சண்முகரத்தினத்தின் நினைவுவிழா எதிர்வரும் 23 ஆம் திகதி மாலை 3 மணிக்கு நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (4-5)

# சைவப்புலவர் சங்கத்தின் நிர்வாகசபைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தின் நிர்வாக சபைக் கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கே.கே.எஸ் வீதி இணுவிலில் அமைந்துள்ள சங்க அலுவலகத்தில் இடம் பெறவுள்ளது.

இதன்போது சங்கத்தால் நடத்தப்பட்ட பரீட்சைப் பெறுபேறு வெளியீடு பற்றிய கலந்துரையாடல், சங்கத்தின் ஏனைய செயற்பாடுகள் உள்ளிட்ட விடயங்கள் ஆராயப்படவுள்ளமையால் நிர்வாகசபை உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் தலைவர் சைவப் புலவர் சி.கா.கமலநாதன் கேட்டுக்கொண்டுள்ளார். (4-5-30)



**மக்கள் நலன் பேணும் அமைப்பின் புதிய கட்டடத் திறந்த விழா கடந்த மாதம் 29 ஆம் திகதி முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பங்குபற்றலுடன் இடம்பெற்றது.**

# கனேடிய உயர்ஸ்தானிகர் யாழ்.நூலகத்திற்கு விஜயம்



(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் நேற்று செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்திற்கு விஜயத்தினை மேற்கொண்டு பார்வையிட்டுள்ளார்.

இதன்போது நூலகத்தில் யாழ்.மாநகர ஆணையாளர் இ.த.ஜெயசீலன் இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் எரிக் வோல்ஸை வரவேற்று கலந்துரையாடினார்.

குறித்த சந்திப்பில் யாழ். பொதுசன நூலக நூலகர் உள்ளிட்ட சில உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டிருந்தனர். (4-5-33)

# இலவச கண்புரை சத்திரசிகிச்சை

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை பிரதேச செயலகப் பிரதேசத்தில் வசிக்கும் கண்புரை சத்திர சிகிச்சை செய்ய வேண்டிய நோயாளர்களைத் தெரிவு செய்யும் இலவச கண் பரிசோதனை முகாம் எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9மணி தொடக்கம் இளவாலை பிரதேச மருத்துவமனையில் இடம்பெறவுள்ளது.

அதேபோன்று பருத்தித்துறை பிரதேச செயலகப் பிரிவினைச் சேர்ந்த கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டியநோயாளர்களைத் தெரிவு செய்யும் இலவச மருத்துவ முகாம் அன்றைய தினம் 9 மணி தொடக்கம் பருத்தித்துறை ஆரம்ப சுகாதார மருத்துவ பிரிவிலும் நடைபெறவுள்ளது.


குறித்த முகாமில் கண்புரை சத்திரசிகிச்சைக்குத் தெரிவு செய்யப்படும் நோயாளர்களுக்கான சத்திரசிகிச்சை மேற்கொள்ளும் திகதி பின்னர் அவர்களுக்குஅறியத் தரப்படும்.

கண்புரை சத்திரசிகிச்சைக்குத் தெரிவு செய்யப்படும் நோயாளர்களை அந்தந்தப் பிரதேசத்திற்குரிய மருத்துவமனைகளில் இருந்து யாழ். போதனா மருத்துவ மனைக்கு அழைத்து வருவதற்கும் சத்திரசிகிச்சை முடிவடைந்த பின்னர் மீண்டும் யாழ்.போதனா மருத்துவமனையில் இருந்து அவர்களது பிரதேசத்திலுள்ள மருத்துவமனைக்கு கூட்டிச் செல்வதற்கான போக்குவரத்து வசதிகள் சுகாதார திணைக்களத்தினரால் இலவசமாக மேற்கொள்ளப்படும்.

எனவே கண்புரை சத்திர சிகிச்சை மேற்கொள்ள வேண்டிய தேவையுடைய நோயாளர்கள் மேற்படி பரிசோதனை முகாமில் கலந்து கொண்டு தங்களது பெயர்களைப் பதிவு செய்யுமாறு யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (4-5)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## தம்பிராசா தருமரத்தினம்

( உரிமையாளர் - சென்றல் மோட்டோர்ஸ், யாழ்ப்பாணம், சங்கர் மோட்டோர்ஸ், சுன்னாகம் )

| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 17.05.1957 | 18.07.2023 |

சண்டிலிப்பாய் மத்தி சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட தம்பிராசா தருமரத்தினம் அவர்கள் 18.07.2023 அன்று இறைவனடி சேர்ந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிராசா - கனகம்மா தம்பதியினரின் அன்பு மகனும் இராசேந்திரம் - அன்னலட்சுமி தம்பதியினரின் அன்பு மருமகனும் சறோஜாதேவியின் அன்புக் கணவரும் கஜரதன்(சென்றல் மோட்டோர்ஸ்), பத்மாயினி, சுபாசினி (மாணவி - ஊவா வெல்லஸ பல்கலைக்கழகம்), சங்கஜன் (சங்கர் மோட்டோர்ஸ்), சிவதர்சினி, கஜரூபன் ஆகியோரின் அன்பு தந்தையும் விதுஷா, டினேஸ்(LOLC Finance) ஆகியோரின் அன்பு மாமனாரும் டிபிக்சனின் அன்பு பேரனும் பாலசுப்பிரமணியம், சிவபாக்கியம், சிவகுருநாதன்(அமரர்), சிவராசா, குணராசா, கமலாதேவி, விமலாதேவி, மல்லிகாதேவி ஆகியோரின் அன்பு சகோதரனும் புஸ்பராணி, நாகமுத்து(அமரர்), கலாவதி, சரோஜாதேவி, வேவி, நாகராசா, சிவசக்திநாதன் மற்றும் விக்கினேஸ்வரன் - கவிப்பிரியா, சிவகாந்தன் - தமிழ்ச்செல்வி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 20.07.2023 வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சண்டிலிப்பாய் மத்தி,
சண்டிலிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்

(16337)

## 13 ஆவது...

வடக்கு, கிழக்கு மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது தொடர்பான சிறந்த யோசனையை தாம் தற்பொழுது முன்வைத்துள்ளதாகவும், அதனை முன்னெடுத்துச் செல்வதா இல்லையா என்பதைத் தமிழ்க் கட்சித் தலைவர்கள் தீர்மானிக்க வேண்டுமெனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

வடக்கு, கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் நேற்று பாராளுமன்ற வளாகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் இதற்கு முன்னர் விருப்பம் தெரிவித்ததாக பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்த கருத்துக்குப் பதிலளித்த ஜனாதிபதி, தான் ரணில் விக்கிரமசிங்க என்றும் ரணில் ராஜபக்ஷ அல்ல என்றும் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்க்கவே தாம் விரும்புவதாகவும் அவர்களால் அரசியல் ஆதாயங்களைப் பெறுவது தனது நோக்கமல்ல எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்துக் கட்சித் தலைவர்களும் முழுமையான அதிகாரப் பகிர்வுக்கு இணங்கினால் 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த முடியும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தில் உள்ள காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை பாராளுமன்றத்தில் 2/3 பெரும்பான்மை கிடைக்கும் பட்சத்தில் வழங்க முடியும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு,கிழக்கு மாகாணங்களை இணைப்பது பற்றி தமிழ் எம்.பிக்கள் இங்கு கேள்வி எழுப்பியிருந்த நிலையில், எந்த விதத்திலும் வடக்கு கிழக்கை இணைப்பதற்கான ஏற்பாடோ அதுகுறித்த கலந்துரையாடல்களோ அரசாங்கம் மேற்கொள்ளவில்லை என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

வடக்கு, கிழக்கில் நீதி நிலைநாட்டும் செயற்பாடுகளில் வெளிநாட்டு நீதிபதிகளை ஈடுபடுத்தும் எண்ணம் அரசாங்கத்திற்கு இல்லையெனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

காணாமல்போனோர் தொடர்பாக ஆராயும் அலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்ற 21,374 முறைப்பாடுகளில் இதுவரை 3,462 முறைப்பாடுகளின் விசாரணைகள் நிறைவடைந்துள்ளதாகவும் ஏனைய முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகள் தற்போது இடம்பெற்று வருவதாகவும் இங்கு குறிப்பிடப்பட்டது.

காணாமல்போனோர் தொடர்பிலான அலுவலகத்திற்கு, காணாமல்போனோர் தொடர்பிலான முழுமையான தகவல்கள் கிடைக்கப்பெறவில்லை என்பதை தமிழ் எம்.பிக்கள் சுட்டிக்காட்டியிருந்த நிலையில், அது தொடர்பில் அவர்களிடத்திலுள்ள தகவல்களை உண்மையை கண்டறிவதற்கான இடைக்கால பொறிமுறைக்கான செயலகத்திற்கு வழங்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவுறுத்தினார்.

ஊழல் ஒழிப்புச் சட்டம், ஜூலை 19 ஆம் திகதி பாராளுமன்றக் குழுநிலையில் திருத்தங்களுக்கு உட்படுத்தப்படும் என்றும் உயர் நீதிமன்றத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள திருத்தங்களும் பரிசீலிக்கப்படும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்திக்காக அரசாங்கத்தின் தற்போதைய வேலைத்திட்டம் தொடர்பிலும் ஜனாதிபதி இதன்போது விடயங்களைத் தெளிவுபடுத்தினார்.

வடக்கு மற்றும் கிழக்கில் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி திட்டங்களாக பசுமை ஹைட்ரஜன் மற்றும் அமோனியா உற்பத்தியில் முதலீட்டு வாய்ப்புகளை உருவாக்குவது குறித்தும் பசுமை ஹைட்ரஜனின் ஊடாக கொழும்பு துறைமுக நகரத்தின் கவர்ச்சியை அதிகரிக்கும் திட்டம் குறித்தும் ஜனாதிபதி விளக்கினார்.

பசுமை ஹைட்ரஜன் மற்றும் அமோனியா உற்பத்தி மூலம் பிராந்தியத்தின் புதுப்பிக்கத்தக்க வலுசக்தித் திறனைப் பயன்படுத்துவதே வடக்கின் அபிவருத்தித் திட்டத்தின் விசேட நோக்கமாகும். இதன் மூலம் முதலீடுகளை ஈர்க்கவும் கொழும்பு துறைமுகத்தை மேம்படுத்தவும் எதிர்பார்க்கப்பட்டுள்ளதோடு, பூநகரி புதிய நகரத்தை புதுப்பிக்கத்தக்க வலுசக்தி பொருளாதார மையமாக பெயரிட்டு, இத்துறையில் வலுவான வளர்ச்சியை உருவாக்குவதே இதன் நோக்கமாகும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

மேலும் "வடக்கிற்கு நீர்" திட்டத்தின் கீழ் பூநகரி ஏரி அபிவிருத்தி, யாழ்ப்பாணத்திற்கு நன்னீர் வழங்கும் நதிநீர் திட்டம், இரணைமடு நீர்த்தேக்கத்தின் கொள்ளளவை அதிகரிப்பது, சிறிய குளங்களின் புனரமைப்பு, காங்கேசன்துறை துறைமுகம் மற்றும் வவுனியா மற்றும் பலாலி விமான நிலைய அபிவிருத்தித் திட்டம், வடமாகாணத்தையும் தென்னிந்தியாவையும் இணைக்கும் படகுச் சேவை, காங்கேசன் துறை, பரந்தன் மற்றும் மாங்குளம் முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்கள் குறித்தும் ஜனாதிபதி இங்கு விளக்கினார்.

வடமாகாணத்தில் சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்வதற்கு யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் சுற்றுலாத்தளங்களின் அபிவிருத்தி, மன்னார் கோட்டை மற்றும் தீவுகள், காங்கேசன்துறை துறைமுகம் மற்றும் வடமராட்சி பிரதேசத்தில் சுற்றுலா படகுச் சவாரித் திட்டம், வன்னி மாவட்டத்தில் தென்னை பயிர்ச்செய்கையை ஊக்குவித்தல் மற்றும் பல்கலைக்கழக நகரமாக யாழ்ப்பாண நகரத்தை அபிவிருத்தி செய்யும் திட்டங்கள் குறித்து வடக்கு மற்றும் கிழக்கு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஜனாதிபதி தெளிவுபடுத்தினார்.

பிரதமர் தினேஷ் குணவர்தன, அமைச்சர்களான சுசில் பிரேமஜயந்த், பிரசன்ன ரணதுங்க, விஜயதாச ராஜபக்ஷ, டக்ளஸ் தேவானந்தா, இராஜாங்க அமைச்சர்களான சுரேன் ராகவன், எஸ். வியாழேந்திரன், எஸ். சந்திரகாந்தன், பாராளுமன்ற உறுப்பினர்களான ஆர். சம்பந்தன், எம்.ஏ. சுமந்திரன், சி.வி. விக்னேஷ்வரன், அங்கஜன் இராமநாதன், செல்வம் அடைக்கலநாதன், சார்ள்ஸ் நிர்மலநாதன், எஸ். சிறீதரன், டி. சித்தார்த்தன், சாணக்கியன் இராசமாணிக்கம், தவராசா கலையரசன், கே. திலீபன், ஜி. கருணாகரன் உட்பட பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் உறுப்பினர்களும் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க உள்ளிட்ட அரச அதிகாரிகளும் இக்கலந்துரையாடலில் கலந்து கொண்டனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடிநீர் கட்டணத்தில் திருத்தம் அமைச்சரவை அங்கீகாரம்



(கொழும்பு)

குடிநீர் மற்றும் கழிவுநீர் கட்டணத்தை திருத்த அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது.

நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் முன்வைத்த யோசனைக்கே இந்த அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை வறிய மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் நீர்க் கட்டணம் அதிகரிக்கப்படும் என நீர் வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

பாரிளுமன்றில் நேற்று கருத்துரைத்த போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

மின்சார கட்டண அதிகரிப்பு காரணமாக நீர் வழங்கல் துறை பாரிய நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளமையினால் நீர்க்கட்டணத்தை அதிகரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (நி-5)

# கோதுமை மா விலை குறைப்பு

(கொழும்பு)

கோதுமை மாவின் விலை உடன் அமுலுக்கு வரும் வகையில் ஒரு கிலோகிராம் 10 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளன.

குறித்த விலைக் குறைப்பு உடனடியாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

# அத்தியாவசிய சேவைகளாக தொடரும் சில அரச சேவைகள்

(கொழும்பு)

சில சேவைகளை அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனப்படுத்தி அதி விசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, மின்சக்தியுடன் தொடர்புடைய அனைத்து சேவைகள், பெற்றோலிய உற்பத்தி மற்றும் எரிபொருள் விநியோகம் என்பன அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

அத்துடன் மருத்துவமனைகள், சிகிச்சை நிலையங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய நிறுவனங்களின் அனைத்து சேவைகளும் அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 10 . 04 . 1968

மறைவு 17 . 07 . 2023

எமது கல்லூரியின் ஆங்கில பாட ஆசிரியர்
திருமதி.சி.ஆனந்தஜோதியின்
அன்புக்கணவர்
அமரர்.,
**வேலாயுதம் சிவசக்திவேல்**
அவர்கள் காலமான செய்தியறிந்து
துயரடைவதுடன் அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

(c-6935)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பிதழ்



கடந்த 22.06.2023
வியாழக்கிழமை
அன்று சிவபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவர்
அமரர்.
**கந்தவனம் அருளானந்தம்**
அவர்களின் 31 ஆம் நாள்
அந்தியேட்டிக் கிரியைகள்
நாளை 20.07.2023
வியாழக்கிழமை காலை
6.00 மணியளவில் கீரிமலை
புனித தீர்த்தக்கரையில் கிரியைகள்
நடைபெற்று அஸ்தி கரைக்கப்படும்.
தொடர்ந்து 22.07.2023 சனிக்கிழமை
அன்னாரது இல்லத்தில் பகல் 11.00
மணியளவில் நடைபெறும் சபிண்டீகரண
கிரியைகளிலும் மதிய போசன
நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.

2ம் குறுக்குத்தெரு,
நாச்சிமார் வீதி,
பருத்தித்துறை.

077 556 4810
077 644 9270

இங்ஙனம்
குடும்பத்தினர்.

(c-6934)

# இராசிபலன்

19.07.2023
ஆடி 03, புதன்கிழமை
துதியை பின்னிரவு 4.02 மணிவரை

பூசம் காலை 8.27 மணிவரை
சுபநேரம் -4.31-6.01 மணிவரை
இராகுகாலம்-12.01-01.31 மணிவரை

சந்திராஷ்டமம்-
பூராடம், உத்தராடம்

வளவன்

**மேஷம்** ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**கடகம்** கற்பனை மிகுதியான நாள், நண்பர்கள் சந்திப்புண்டு, வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**துலாம்** மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் குடிகொள்ளும், அந்நியர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், வாய்ப்புண்டு, செய்தொழில் மேன்மையுண்டு, போசன சுகமுண்டு.

**மகரம்** பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம், அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், குடும்பத்தில் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது.

**ரிஷபம்** உறவினர்கள் உங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவார்கள், விடாமுயற்சிக்கு இன்று பரிசு கிடைக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**சிம்மம்** அனைவரையும் அனுசரித்துச் செல்வது நல்லது, மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.

**விருச்சிகம்** வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பெரிய மனிதர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.

**கும்பம்** குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், உறவினர் வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காணும் நாள்.

**மிதுனம்** கடினமான வேலைகளைக் கூட நயமாகப் பேசி சமாளிப்பீர்கள், ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள், நாவன்மையால் நல்ல பெயர். கிடைக்கும், பயணங்களால் பலனுண்டு.

**கன்னி** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.

**தனுசு** எதையும் ஒருமுறைக்கு பலமுறை யோசித்து செய்வது நல்லது, கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, தொழிலில் கூடுதல் விழிப்புணர்வு அவசியம்.

**மீனம்** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், நீண்டநாட்களாக திட்டமிட்ட காரியங்கள் கைகூடும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்த வினையும் செய்கின்ற தீவினையும் ஓர் எதிரொலியைக் காட்டாமல் மறையாது.

# மனிதப் புதைகுழிக்கு புலிகளே காரணமாம் இராணுவம் தான் தமிழர்களை பாதுகாத்ததாம்

## உளறுகிறார் சரத் வீரசேகர



(கொழும்பு)
தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனிடம் பணயக் கைதிகளாக இருந்த தமிழ்ர்களை பாதுகாக்க இராணுவத்தினர் உயிர்த் தியாகம் செய்தார்கள் என பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் குறிப்பிடுகையில்,

தற்போது வடக்கில் கண்டு பிடிக்கப்படும் மனிதப் புதைகுழிகள் தொடர்பில் உரிய தரப்பினர் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும். இந்த மனிதப் புதைகுழிகளுடன் இலங்கை இராணுவத்தை தொடர்புப்படுத்தவே தமிழ் அரசியல்வாதிகள் முயற்சிக்கின்றார்கள்.

தமிழர்களை பாதுகாக்க இராணுவத்தினர் உயிர்த் தியாகம் செய்தார்கள்.

தமிழர்களை கொல்ல வேண்டிய தேவை இராணுவத்திற்கு இல்லை. இலங்கை இராணுவத்தினர் யுத்தக் குற்றங்களில் ஈடுபட்டார்கள் என முன்வைக்கும் குற்றச்சாட்டுக்கள் எதுவும் இதுவரை நிரூபிக்கப்படவில்லை.


இலங்கையில் யுத்தக் குற்றங்கள் எதுவும் இடம்பெறவில்லை என்று சர்வதேச நிபுணர்கள் அறிக்கை சமர்ப்பித்துள்ளனர்.

பிரபாகரனிடம் பணயக் கைதிகளாக இருந்த தமிழர்களை பாதுகாக்க இராணுவத்தினர் உயிர்த் தியாகம் செய்தார்கள். முல்லைத்தீவு பகுதியில் 600 பொலிஸாரை விடுதலைப் புலிகள் அமைப்பினர் படுகொலை செய்தனர். இது யுத்தக் குற்றம் இல்லையா?

யார் மனிதப் படுகொலை செய்தது. விடுதலைப் புலிகளே மனிதப் படுகொலை செய்தார்களே தவிர இராணுவத்தினர் அல்ல. தமிழர்களை பாதுகாத்து நாங்கள் யுத்தத்தை நிறைவுக்கு கொண்டு வந்தோம் என தெரிவித்துள்ளார். (நி-5)

# பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளான பேருந்து

## ஒருவர் பலி, எண்மர் காயம்



(கொழும்பு)
எல்ல - வெல்லவாய வீதியின் ரஹதன்கந்த பகுதியில் இடம்பெற்ற பேருந்து விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று செவ்வாய்க்கிழமை காலை இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

இதேவேளை குறித்த பேருந்து பள்ளமொன்றில் வீழ்ந்து விபத்திற்குள்ளாகியதோடு விபத்தில் காயமடைந்த 8 பேர் வெல்லவாய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வெல்லவாய பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (நி-5)

# துபாயில் உள்ள சந்தையில் இலங்கை தயாரிப்புகள்

(கொழும்பு)
"Best of Sri Lanka" என்ற இலங்கை தயாரிப்புகளின் சந்தைப்படுத்தல், துபாயின் அல் பர்ஷாவில் உள்ள லுலு ஹைப்பர் சந்தையில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் துபாயில் உள்ள இலங்கையின் தூதரகத்தின் துணைத் தூதுவர் அலெக்சி குணசேகர கலந்து கொண்டார்.

இலங்கையின் தனித்துவமான சுவை, தரம் மற்றும் பாரம்பரிய கலாசாரத்தை அறிமுகப்படுத்துவதே இந்த சந்தைப்படுத்தலின் பிரதான நோக்கமாகும்.

அதனடிப்படையில் இந்தச் சந்தையில் தேங்காய் பொருட்கள், பழங்கள், காய்கறிகள், தானியங்கள், தின்பண்டங்கள் என இலங்கை தயாரிப்பு பொருட்கள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

லுலு ஹைப்பர் சந்தையானது துபாயில் 98 இற்கும் அதிகமான கடைகளுடன் மத்திய கிழக்கின் மிகப்பெரிய சில்லறைச் சங்கிலிகளில் ஒன்றாகும்.

ஆகவே இந்நிகழ்வானது உலக நாடுகளில் இலங்கை உற்பத்திப் பொருட்களுக்கு இருக்கும் மதிப்பை இன்னும் பல மடங்கு அதிகரித்து ஏற்றுமதி, இறக்குமதியை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (நி-5)

# கோழிக்குஞ்சுகளை சலுகை விலையில் வழங்குமாறு கோரிக்கை

(கொழும்பு)
அண்மைக்காலமாக இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட முட்டையிலிருந்து புதிதாக பொரித்த 13,500 குஞ்சுகளையாவது வழங்குமாறு அகில இலங்கை கோழிப்பண்ணை சங்கம் அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளதுடன் அவற்றை தமது சங்கத்தின் ஊடாக கிடைக்கச் செய்யுமாறும் கோரியுள்ளது.

இரண்டு தடவைகளில் 70,000 குஞ்சு பொரிக்கும் முட்டைகள் நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்டதாகவும் அந்த முட்டைகள் அரசுக்கு சொந்தமான கோழிப்பண்ணைகளுக்கு அனுப்பப்பட்டதாகவும் சங்கத்தின் ஆலோசகர் மாதலி ஜயசேகர தெரிவித்தார்.

"21 நாட்களுக்குப் பின்னர், முட்டையிலிருந்து குஞ்சுகள் வெளிவரும். அந்தக் குஞ்சுகள் கோழிப் பண்ணையாளர்களிடையே விநியோகிக்கப்படும். இதை தலா 13,500 வீதம் நான்கு தொகுதிகளில் செய்யலாம்," என்றும் அவர் குறிப்பிட்டார்.

பொருளாதாரச் சிக்கல்கள் காரணமாக, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கோழிப் பண்ணைகள் அதிக அளவில் மூடப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. எனவே, சிறிய அளவிலான கோழிப்பண்ணைகளில் புதிதாக குஞ்சு பொரித்த 13,500 குஞ்சுகளையாவது விநியோகிப்பதற்கான வாய்ப்பை அமைச்சர் தங்களுக்கு வழங்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

குஞ்சுகளை விவசாயிகளுக்கு நியாயமான விலையில் வழங்குமாறும் குஞ்சுகளை 450 ரூபாவுக்கு விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள போதிலும் கறுப்புச் சந்தையில் 500 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதாகவும் தெரிவித்தார்.

எனவே நலிவடைந்து வரும் கோழிப்பண்ணை தொழிலை மேம்படுத்த குறைந்தபட்சம் இந்தக் கோழிக் குஞ்சுகளை சலுகை விலையில் வழங்குமாறு அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (நி-5)

# தேர்தலில் பங்கேற்ற அரச ஊழியர்களுக்கு முறையான சம்பளம் இதுவரை வழங்கப்படவில்லை

## எதிர்க்கட்சி தலைவர் சஜித் தகவல்

(கொழும்பு)
தேர்தல் தொடர்ந்தும் ஒத்திவைக்கப்படுவதால் தேர்தலில் பங்கேற்ற அரச பணியாளர்களுக்கு சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் முறையாக வழங்கப்படவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

மேலும், சில அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற துணை நிறுவனங்களினது ஊழியர்களுக்கு உரிய விடுமுறை கூட கிடைக்கவில்லை.

இந்நிலை அவர்களது சேவைக்காலம் முழுவதையும் பாதிப்பதாகவும் இந்நிலைமைக்கு தீர்வு காணப்பட்டதாக கூறப்படுகின்ற போதிலும் இதுவரை தீர்வு காணப்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

அரசாங்கம் சுற்றுநிருபம் வெளியிட்டும் இந்தப் பிரச்சினைகளை தீர்க்க முடியாதது ஏன் என்று வினவுவதாகவும்



எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். (நி-5)

# ஜனாதிபதி தேர்தலில் களமிறங்கும் டலஸ்

## வெளியான அறிவிப்பு

(கொழும்பு)
எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சுதந்திர மக்கள் பேரவையின் ஜனாதிபதி வேட்பாளராக பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெருமவை முன்னிறுத்த தீர்மானித்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் லலித் எல்லாவல தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், சுதந்திர ஜனதா சபை தனக்கு ஆதரவளிக்கத் தயாராக உள்ளவர்களுடன் கூட்டணி அமைக்கத் தயாராக இருப்பதாகவும் இத்தொடர்பில் எதிர்க்கட்சிகளுடன் கலந்துரையாடுவதற்குத் தயார் என பாராளுமன்ற உறுப்பினர் லலித் எல்லாவல தெரிவித்துள்ளார். (நி-5)

# நாளுக்கு நாள் அதிகரிக்கும் டெங்கு மரணங்கள்

(கொழும்பு)
டெங்கு நோயினால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் ஆபத்தான விகிதத்தில் அதிகரித்து வருவதாகத் தகவல் [illegible] ளது.

அந்தவகையில் [illegible] வருடம் மாத்திரம் டெங்கு நோயினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 34 ஆக அதிகரித்துள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# பால் உற்பத்தி துறையை ஊக்குவிக்க பிரான்ஸ் நிதியுதவி

(கொழும்பு)
நாட்டின் பால் உற்பத்தித் துறையை அபிவிருத்தி செய்யும் நோக்கில் 250 மில்லியன் ரூபாவினை வழங்குவதற்கு பிரான்ஸ் இணங்கியுள்ளது.

விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர மற்றும் பிரான்ஸ் முகவர் நிறுவன பிரதிநிதிகளுக்கு இடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது இதற்கான முதற்கட்ட இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

நாட்டின் பால் உற்பத்தியை அதிகரித்தல், பாலின் தரத்தை அதிகரித்தல் மற்றும் கறவை பசுக்களை பராமரித்தல் போன்ற நடவடிக்கைகளுக்காக இந்த நிதியுதவி வழங்கப்படவுள்ளது. (நி-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இறக்குமதி கட்டுப்பாடுகளின் மூலம் 526 பில்லியன் ரூபா சேமிப்பு

(கொழும்பு)

இறக்குமதி கட்டுப்பாடுகளை விதித்ததன் மூலம் 526 பில்லியன் ரூபா சேமிக்கப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித்சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.



மேலும் 286 பொருட்களுக்கான இறக்குமதி கட்டுப்பாடுகளை நீக்குவது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை அமைச்சர் நேற்று பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார்.

இந்த நிலையில் தற்போது 930 பொருட்கள் மட்டுமே நாட்டிற்கு இறக்குமதி செய்ய தடை விதிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (நி-5)

# தரம் குறைந்த மருந்துகளை உடனடியாக அகற்ற வேண்டும்

## சஜித் வலியுறுத்து

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் உள்ள மருத்துவமனைகளில் காணப்படும் தரம் குறைந்த மருந்துகளை உடனடியாக அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியுள்ளார்.

பாராளுமன்றில் நேற்று இடம்பெற்ற சபை விவாதத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இதனை தெரிவித்துள்ளார்.

இதன் போது மேலும் கருத்து தெரிவித்த அவர்,

"நோயாளிகளின் உயிரைப் பறித்து பணம் சம்பாதிக்கும் அனைத்து தரப்பினருக்கும் எதிராக அரசாங்கம் உடனடியாக கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மருந்து தட்டுப்பாடு, மருத்துவ உபகரணங்களின் பற்றாக்குறை, தரமற்ற மருந்துகள், நோயாளர் பராமரிப்பு பிரச்சினைகள், கவனக் குறைவு போன்ற காரணங்களால் நோயாளிகளின் உயிரிழப்புகளை நாடுமுழுவதிலும் இந்த நாட்களில் நாம் அதிகம் கேள்விப்பட்டு வருகிறோம்.

மேலும், உயிரிழந்தவர்களின் சிகிச்சைக்காக வழங்கப்பட்ட மருந்துகளினால் உடனடி மரணம் ஏற்படுவதற்கான காரணங்களை உடனடியாக ஆராய்ந்து, இது போன்ற சம்பவங்கள் தொடராமல் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்" என தெரிவித்துள்ளார். (நி-5)


## வட இலங்கைச் சங்கீத சபை

### மருதனார்மடம்- சுன்னாகம்

**2023 ஆம் ஆண்டுக்கான எழுத்துப் பரீட்சைகள்**
**பிற்போடல்**

வட இலங்கைச் சங்கீத சபையின் இவ்வாண்டு யூலை மாதம் 29, 30 ஆம் திகதிகளில் (சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை) நடைபெறவிருந்த எழுத்துப் பரீட்சைகள் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளன. இப்பரீட்சைகள் யாவும் வழங்கப்பட்ட நேர அட்டவணைக்கு அமைவாக **ஆகஸ்ட் மாதம் 26, 27 ஆம் திகதிகளில் (சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில்) நடைபெறும்.**

**பொ.இரவிச்சந்திரன்,**
**தலைவர்,வட இலங்கைச் சங்கீத சபை,**
**மருதனார்மடம், சுன்னாகம்.** (சி-6936)



## ஆதன உரிமை மாற்ற அறிவித்தல் வலிகாமம் வடக்கு பிரதேசசபை உப அலுவலகம்- தெல்லிப்பளை

**விண்ணப்பதாரர் - சதாசிவம் இராமநாதன்**
**முகவரி -40, பொஸ்வல் இடம், கொழும்பு 06**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் வடக்கு பிரதேசசபை, தெல்லிப்பளை உப அலுவலக எல்லைக்குட்பட்ட வட்டாரம்-09 பொன்னுசீமா வீதியில் அமைந்துள்ளது.

குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிஸ் தம்பையா பழனிவேல் பரமேஸ்வரன் முகதாவில் 102ஆம் இலக்கத்தில் 29.05.2023ஆம் திகதியில் வெளிப்படுத்தல் உறுதி முடிக்கப்பட்டுள்ளது.

**ஆதன விபரம்**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் வடக்குப் பகுதி தெல்லிப்பளை கோவிற்பற்று தெல்லிப்பளை பழை இறையுமான "நூகாளையும் வளவும்" நிலப்பரப்பு 10பரப்பு குளி 15.5. இது உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் P.புஸ்பராஜா அவர்கள் வரைந்த 11551/2023.06.25 ஆம் இலக்க வரைபடத்தின்படி துண்டு-01 ஆகக் காட்டப்பட்டுள்ளது. இதன் எல்லைகள்

கிழக்கு- கிராம சங்க ஒழுங்கை.
வடக்கு- சின்னத்தம்பி அப்புக்குட்டிக்கும் பங்காளருக்கும் சுப்பிரமணியம் பரராசசேகரத்துக்கும் பங்காளருக்குரிய ஆதனங்கள்.
மேற்கு- வயித்திலிங்கம் பெண் இராசமணிக்குரிய ஆதனம்.
தெற்கு- குறித்த வயித்திலிங்கம் பெண் இராசமணிக்கும் நடராசா பெண் இராசேஸ்வரிக்குமுரிய ஆதனங்கள் இதனடாங்கலும் அதைச் சேர்ந்தவைகளும்.

மேற்குறித்த ஆதனத்தை **சதாசிவம் இராமநாதன்** எனும் பெயரில் பெயர் மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயருக்கு பெயர்மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சுந்தரேஸ்வரன் சுதர்ஜன் செயலாளர், .**
**வலிகாமம் வடக்கு பிரதேசசபை,**
**காங்கேசன்துறை. (கொல்லங்கலட்டி)**
(16319)


# ஜனாதிபதியை சந்தித்த உலக வங்கியின் பிரதிநிதி

(கொழும்பு)

உலக வங்கியின் தெற்காசிய பிராந்தியத்திற்கான உபதலைவர் மார்ட்டின் ரைசர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேற்று முன்தினம் திங்கட்கிழமை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.


கடன் மறுசீரமைப்பின் முன்னேற்றம் மற்றும் நாட்டின் பொருளாதார மீட்சிக்கு தனியார் முதலீடுகளை அதிகரிப்பதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய முக்கியமான சீர்திருத்தங்கள் குறித்து இதன் போது கலந்துரையாடப்பட்டதாக மார்ட்டின் ரைசர் தனது டுவிட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் மாதங்கள் இலங்கைக்கு மிகவும் தீர்க்கமானவை என தெரிவித்துள்ள அவர், உலக வங்கி எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இலங்கைக்கு ஆதரவளிக்க தயாராக இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இலங்கையின் மீட்சி குறித்து தனியார் துறையினருடனும் மார்ட்டின் ரைசர் முக்கிய சந்திப்புக்களில் ஈடுபட்டுள்ளார்.

சுற்றுலாத்துறை, தகவல் தொழில்நுட்பம் மற்றும் விவசாயம் போன்ற துறைகளில் வேலை வாய்ப்புக்களை உருவாக்க உதவும் கொள்கைகள் குறித்து இதன் போது கலந்துரையாடப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், மேக்ரோ பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் மேம்படுத்தப்பட்ட நிர்வாகம் ஆகியவை தனியார் துறை முதலீடுகளை ஈர்ப்பதில் முக்கிய பங்கு வகிப்பதாக இதன் போது அவர் தனியார் துறை யினரிடம் சுட்டிக் காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)



# சந்தைகளில் நேற்றைய விலைகள்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 250 | 280 | 320 |
| உருளைக்கிழங்கு | 220 | 240 | 220 | 240 |
| பச்சைமிளகாய் | 500 | 500 | 500 | 500 |
| தக்காளி | 480 | 450 | 500 | 600 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 240 | 220 | 280 |
| கோவா | 250 | 230 | 300 | 300 |
| கரட் | 400 | 480 | 500 | 550 |
| பூசணி | 120 | 100 | 100 | 120 |
| புடோல் | 140 | 140 | 150 | 160 |
| வாழைக்காய் | 120 | 160 | 150 | 150 |
| சின்ன வெங்காயம் | 450 | 380 | 350 | 550 |
| பெரிய வெங்காயம் | 160 | 140 | 150 | 160 |
| பாகற்காய் | 450 | 400 | 400 | 500 |
| வெண்டக்காய் | 200 | 160 | 180 | 300 |
| கருணைக் கிழங்கு | 180 | 180 | 200 | 250 |
| பயற்றங்காய் | 250 | 250 | 180 | 200 |
| லீக்ஸ் | 220 | 250 | 250 | 300 |
| பீற்றூட் | 400 | 300 | 350 | 350 |
| கறிமிளகாய் | 350 | 350 | 400 | 400 |
| முருங்கைக்காய் | 300 | 300 | 300 | 320 |
| போஞ்சி | 500 | 450 | 400 | 550 |
| கத்தரிதம்புள்ள | 250 | 150 | 280 | 300 |
| கீரை - 1 பிடி | 80 | 80 | 80 | 100 |
| தேசிக்காய் | 150 | 250 | 200 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 60 | 60-80 |
| இராசவள்ளி | 350 | 260 | 250 | 280 |
| வெங்காயப்பூ | 250 | 250 | 300 | 320 |
| முள்ளங்கி | 120 | 120 | 150 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 | 50 |
| வல்லாரை | 50 | 30 | 50 | 60 |
| ஈரப்பலா | 160 | 200 | 150 | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டினியால் உலக மக்களை நசுக்க நினைக்கும் புடின்

## ஒருபோதும் இடமளிக்க மாட்டோம் என்கிறார் ஜெலென்ஸ்கி



(கீவ்)

"எந்தவொரு நாட்டினதும் உணவுப் பாதுகாப்பை அழிக்க யாருக்கும் உரிமை இல்லை" என்று உக்ரைன் ஜனாதிபதி விளாடிமிர் ஜெலென்ஸ்கி கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற கருங்கடல் தானிய ஒப்பந்தத்தில் இருந்து மொஸ்கோ விலகியதைத் தொடர்ந்து "ரஷ்யாவின் பைத்தியக்காரத்தனத்திலிருந்து" உலக நாடுகள் பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை உக்ரைனின் ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

ரஷ்யா பங்கேற்றாலும் சரி பங்கேற்காவிட்டாலும் சரி உக்ரைனின் துறைமுகங்களில் இருந்து தானிய ஏற்றுமதி தொடர வேண்டும் என்று அவர் அறிவுறுத்தியுள்ளார்.

உக்ரைனை நம்பியுள்ள பல்வேறு நாடுகளின் 400 மில்லியன் மக்களின் உயிருக்கு பயங்கரவாத அரசு ஆபத்தை ஏற்படுத்தியுள்ளது என்றும் இதனைத் தடுக்க உக்ரைன், ஐக்கிய நாடுகள் சபை மற்றும் துருக்கியுடன் சேர்ந்து, "உணவு வழித்தடத்தின் செயற்பாடு மற்றும் கப்பல்களின் ஆய்வு" ஆகியவற்றை தொடர முடியும்.

இதன் மூலம் மக்களின் பட்டினிச்சாவை கணிசமான அளவு குறைக்க முயற்சிக்க முடியும் என அவர் தெரிவித்தார். கருங்கடல் ஒப்பந்தத்தை நிறுத்துவதற்கான ரஷ்யாவின் முடிவு உலக நாடுகளில் உணவு தேவைப்படும் மக்களுக்கு ஒரு அடியாக இருக்கும் என்று ஐ.நா பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டரெஸ் பதிலளித்தார்.

ஆனால் உலகளாவிய உணவுப் பாதுகாப்பு மற்றும் விலை ஸ்திரத்தன்மையை முன்னேற்றுவதற்கான எங்கள் முயற்சிகளை இது நிறுத்தாது என்றும் அவர் தெரிவித்தார். (நி-5)

## சீரற்ற வானிலை காரணமாக போலந்தில் விமான விபத்து

### ஐவர் உயிரிழப்பு



(போலந்து)

போலந்து நாட்டில் சிறிய ரக விமானம் ஒன்று மோதிய விபத்தில் சிக்கி ஐவர் உயிரிழந்துள்ளனர். நேற்று முன்தினம் மாலை வேளை போலந்து நாட்டின் கிரிசினோ நகரில் உள்ள விமான நிலைய கொட்டகையில் சிறிய ரக விமானம் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் விமானி உட்பட ஐவர் உயிரிழந்துள்ளனர்.

ஸ்கை டைவிங்கிற்கு பயன்படும் செஸ்னா 208 என்ற சிறிய ரக விமானமே விபத்தில் சிக்கி இருப்பதாக போலந்து நாட்டின் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சீரற்ற வானிலை காரணமாக உடனடியாகத் தரையிறங்க முற்பட்ட வேளையிலேயே விமான நிலையத்திற்கு அருகில் இருந்த கொட்டகையில் மோதி விபத்து நிகழ்ந்துள்ளதாக தீயணைப்பு துறை செய்தி தொடர்பாளர் மோனிகா நேரோகோவ்ஸ்கா-பிரைண்டா தகவல் தெரிவித்துள்ளார்.

சீரற்ற வானிலை காரணமாக பொதுமக்கள் விமான கொட்டகையில் தங்க வைக்கப்பட்டு இருந்தனர். இந் நிலையில் எதிர்பாராத வேளையில் திடீரென நிகழ்ந்த விமான விபத்தில் சிக்கி ஐவர் உயிரிழந்துள்ளனர். மேலும் 10 பேர் பலத்த காயமடைந்துள்ளனர் எனவும் தெரியவந்துள்ளது.

காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக போலந்து நாட்டின் சுகாதாரத்துறை அமைச்சர் ஆடம் நீட்ஜில்ஸ்கி தெரிவித்துள்ளார்.

மீட்புப் பணிகள் தொடர்ந்த வண்ணம் இருப்பதாக ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. (நி-5)

## திருக்குறளை உலகறியச் செய்த ஜி.யு.போப்பிற்கு கனடாவில் உருவச்சிலை

### தமிழக முதல்வர் பெருமிதம்



(டில்லி)

திருக்குறளை உலகறியச் செய்த ஜியு.போப்பிற்கு கனடாவில் உருவச்சிலை அமைக்கப்பட்டதை குறித்து பெருமகிழ்ச்சி அடைவதாக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில்,

ஜி. யு.போப் தமிழ் மொழிக்கு ஆற்றிய பணி அளப்பரியது. அவர் திருக்குறள், நாலடியார், திருவாசகம் உள்ளிட்ட பல்வேறு தமிழ் இலக்கியங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் ஆவார்.

அவரது மொழிபெயர்ப்பு உன்னதமான மொழிபெயர்ப்பாக இன்றும் போற்றப்படுகின்றது. அவர் தமிழிலும் ஆங்கிலத்திலும் பன்னிரெண்டு நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார்.

இம்முயற்சியை முன்னெடுக்கின்ற கனேடியத் தமிழர் பேரவைக்கும் கனடா வாழ் தமிழ் மக்களுக்கும் எனது உளமார்ந்த வாழ்த்துகளையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன் என தெரிவித்துள்ளார். (நி-5)

## 3 வயது குழந்தையின் துப்பாக்கிச் சூட்டில் ஒரு வயது சகோதரி உயிரிழப்பு

(கலிபோர்னியா)

3 வயது குழந்தையொன்றின் துப்பாக்கிப் பிரயோகத்தில் அக்குழந்தையின் சகோதரியான ஒரு வயதான குழந்தை உயிரிழந்த சம்பவம் அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் இடம்பெற்றுள்ளது.

சன்டியாகோ கவுன்ரியில் நேற்று முன்தினம் காலை இச்சம்பவம் இடம்பெற்றதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வீட்டில் பாதுகாப்பற்ற முறையில் வைக்கப்பட்டிருந்த கைத்துப்பாக்கியை 3 வயதான குழந்தை எடுத்து, தற்செயலாக துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக தெரியவந்துள்ளது.

ஒரு வயதான குழந்தை தலையில் காயமடைந்த நிலையில், தீயணைப்புப் படையினர் மூலம் மருத்துவமனை கொண்டு செல்லப்பட்டது. அங்கு அக்குழந்தை இறந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது. (நி-5)

## ஐந்து மாடிக்கட்டடம்

# இடிந்து விழுந்து

## எகிப்தில் 13 பேர் பலி



(நெய்ரோ)

எகிப்து தலைநகர் நெய்ரோவில் ஐந்து மாடி கட்டடம் இடிந்து வீழ்ந்ததில் 13 பேர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் குறித்த பகுதியில் தொடர்ந்தும் மீட்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக மீட்புப் படையினர் தெரிவித்துள்ளனர்.

விபத்தில் காயமடைந்த நபர்கள் மருத்துவமனையில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (நி-5)

## அருகருகே பறந்த அமெரிக்க,ரஷ்ய போர் விமானங்கள்

### சிரியா வான்பரப்பில் பதற்றம்

(டமஸ்கஸ்)

சிரியாவின் வான்பரப்பில் நேற்று முன்தினம் அமெரிக்க போர் விமானமும் ரஷ்ய போர் விமானமும் அருகருகே பறந்தமையினால் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

அமெரிக்க விமானப்படைக்கு சொந்தமான எம்.சி-12 ரக போர் விமானம் பறந்து கொண்டிருந்தபோது திடீரென ரஷ்யாவின் சு-35 ரக போர் விமானம் அதன் அருகே மோதும் வகையில் வந்துள்ளது.

இதனால், திடீரென பரபரப்பு ஏற்பட்டதோடு, பின்னர் உடனடியாக இரு போர் விமானங்களும் விலகிச் சென்றுள்ளன.

சிரியாவில் இடம்பெற்று வருகின்ற உள்நாட்டு போரின் விளைவாக சிரியா ஜனாதிபதி பஷில் அல் அசாத்திற்கு ரஷ்யா



தனது ஆதரவை வழங்கி வருவதோடு, ஆரம்பத்தில் சிரியாவில் குர்திஷ் கிளர்ச்சியாளர்களுக்கு அமெரிக்கா ஆதரவு தெரிவித்து வந்துள்ளது.

ஆனால், தற்போதைய சூழலில் சிரியாவில் பதுங்கியுள்ள ஐ.எஸ். பயங்கரவாதிகளை குறிவைத்து அமெரிக்கா வான்வெளி தாக்குதல் மட்டும் நடத்தி வருகிறது.

அத்துடன், சிரியாவின் வான் பகுதியில் அவ்வப்போது ரோந்து பணியிலும் அமெரிக்கா ஈடுபட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாவகச்சேரி நகர சபையின்

# சிறுவர் பூங்கா காணியில் சமுர்த்தி வங்கி கட்டடம்

## எதிர்ப்பு தெரிவித்து ஆளுநருக்கு கடிதம்

(சாவகச்சேரி)
சாவகச்சேரி நகரசபையின் கடந்த கால சபைத் தீர்மானங்களுக்கு முரணான வகையில் சிறுவர் பூங்காவிற்கென நகர சபையால் கொள்வனவு செய்யப்பட்டுள்ள காணியை சமுர்த்தி வங்கிகட்டடம் அமைக்க வழங்க எடுக்கப்படும் முயற்சிக்கு சாவகச்சேரி நகரசபையின் முன்னாள் தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் தமது எதிர்ப்பினை வெளியிட்டிருப்பதுடன் இது தொடர்பாக வடக்கு மாகாண ஆளுநருக்கும் கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளனர்.

ஆளுநருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில்,

எமது சபை பதவியில் இருந்த காலப்பகுதியில் பலரதும் தீவிர முயற்சியால் சிறுவர் பூங்கா ஒன்றின் அவசியம் கருதி நுணாவில் பகுதியில் காணி கொள்வனவு செய்யப்பட்டது.

எமது பிரதேசத்தில் சிறுவர் மற்றும் முதியவர்களுக்கான பொழுதுபோக்கு மையங்கள் எவையும் இல்லை.

இதனால் சிறுவர்கள் தடம் மாறிச் செல்லும் சந்தர்ப்பங்களும் உள ரீதியான பாதிப்புக்களுக்கும் முகங்கொடுக்கின்ற நிலையும் காணப்படுகின்றது.

மக்கள் வரிப்பணத்தில் சிறுக சிறுக சேமித்த பணத்தில் காணியும் சபை நிதியில் 45 இலட்சம் ரூபாய் பெறுமதியான விளையாட்டு உபகரணமும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் சிறுவர் பூங்கா காணிக்கான சுற்று மதில் அமைக்கும் பணிகளும் இடம்பெற்று வருகின்றன.

இது இவ்வாறிருக்க சபை இல்லாத தற்போதைய காலப் பகுதியில் சபைத் தீர்மானங்களை மீறி சமுர்த்தி வங்கி கட்டடம் அமைக்க சிறுவர் பூங்கா காணியின் ஓர் பகுதியை வழங்குவதற்கான முயற்சிகள் இடம் பெறுகின்றன.

எனவே இது தொடர்பாக தாங்கள் ஆராய்ந்து சிறுவர் பூங்கா காணியை சமுர்த்தி வங்கி அமைக்க வழங்கும் முயற்சியை கைவிடுமாறும் அரச திணைக்களம் ஒன்றிற்கு எம்மால் சிறுக சிறுக சேமித்து கொள்வனவு செய்த காணியை வழங்க முயற்சிக்க வேண்டாம் எனவும் கேட்டுக்கொள்கிறோம். அத்துடன் சிறுவர் பூங்காவை பூரணப் படுத்த தங்களின் மேலான உதவிகளையும் எதிர்பார்க்கிறோம் என மேலும் அவர்கள் தமது கடிதத்தில் குறிப்பிட்டிருந்தனர். (4-5-30)

## கிளிநொச்சி மருத்துவமனையில்

# பிரசவ அறைக்கான குளிரூட்டி பழுது




(கண்டாவளை)
கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் பிரசவ அறைக்கான குளிரூட்டி பழுதடைந்துள்ளதால் பிரசவத்திற்காக செல்லும் கர்ப்பவதிகள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் பிரசவ அறைக்கான குளிரூட்டி கடந்த ஒரு வாரத்திற்கு மேலாக பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றது.

இதனால் மகப்பேறுக்காக சென்று பிரசவத்திற்காக தங்கியிருங்கும் தாய்மார் பெரும் கஷ்டங்களை எதிர்கொள்கின்றனர்.

முல்லைத்தீவு, மல்லாவி, மாங்குளம், நட்டாங்கண்டல் ஆகிய வைத்தியசாலைகளிலிருந்தும் விசுவமடு, உடையார்கட்டு, தருமபுரம் ஆகிய பகுதிகளிலும் உள்ள கர்ப்பவதிகள் பிரசவத்திற்காக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கே வருகின்றனர்.

கடந்த ஜனவரி மாதம் முதல் அதிகளவான பிறப்பு வீதத்தை கொண்ட வைத்தியசாலைகளில் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையும் ஒன்றாக காணப்படுகிறது.

இந்த நிலையில் மாவட்ட பொது வைத்தியசாலையின் மகப்பேற்று அறையின் குளிரூட்டி வசதி முற்றாக செயலிழந்த நிலையில் பிரசவத்துக்காக காத்திருக்கின்ற தாய்மார்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்வதாக எதிர்கொள்கின்றனர்.

எனவே குறித்த வைத்தியசாலையினுடைய மகப்பேற்று அறையின் குளிரூட்டி வசதிகளையும் ஏனைய அடிப்படை வசதிகளையும் செய்து கொடுப்பதற்கு மருத்துவத் துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பலரும் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-5-315)

# போதைப்பொருள் கட்டுப்படுத்தல் தொடர்பில் வவுனியாவில் விசேட கூட்டம்

(குருமன்காடு)
வவுனியாவில் போதைப் பொருளை கட்டுப்படுத்தல் தொடர்பான விசேட கூட்டம் ஒன்று மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கு.திலீபன் தலைமையில் இடம்பெற்றது.



வவுனியா பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் குறித்த கூட்டம் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

வவுனியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கிராமங்களில் இடம்பெறும் போதைப்பொருள் பாவனை, போதைப்பொருள் விற்பனை தொடர்பாகவும் அது தொடர்பில் பொலிஸார் மற்றும் கிராம மட்ட அமைப்புக்களின் செயற்பாடுகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

இதன்போது பூவரசன்குளம், ஈஸ்வரிபுரம், மரையடித்தகுளம் உள்ளிட்ட பல கிராமங்களில் போதைப்பொருள் பாவனை மற்றும் விற்பனை இடம்பெறுவதாக சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

போதைப்பொருள் விற்பனை செய்யப்படும் இடங்கள் தொடர்பாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

அத்துடன், குறித்த போதைப் பொருள் பாவனை தொடர்பில் பொலிஸார் எடுக்கும் நடவடிக்கைகள் மந்த கதியில் உள்ளதாகவும் பொலிஸார்பற்றாக்குறை உள்ள போதும் பொலிஸார் உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை எனவும் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

இதில் கலந்து கொண்ட வவுனியா மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், இது தொடர்பில் கவனம் செலுத்துவதாகவும் மக்களது பிரச்சினைகளை தமக்கு முன்வைக்குமாறும் தெரிவித்ததுடன் தனது தொலைபேசி இலக்கத்தையும் பொது அமைப்புக்களுக்கும் மக்களுக்கும் வழங்கியிருந்தார். (4-5-250)



யாழ்ப்பாணத்திற்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள இலங்கைக்கான கனேடிய தூதுவர் எரிக் வோல்ஸ் நேற்று யாழ்ப்பாணம், கைதடியில் அமைந்துள்ள பனை அபிவிருத்தி சபையின் ஆராய்ச்சிக் கூடத்தை பார்வையிட்டார்.

மேலும் பனை அபிவிருத்தி சபையினுடைய எதிர்கால செயற்பாடுகள், புதிய பனைசார் உற்பத்திப் பொருட்கள் கண்டுபிடிப்புக்கான நிதி உதவிகள் தொடர்பாகவும் இதன்போது ஆராயப்பட்டன. (படம்:-கஜிந்தன்)

# ஹெரோயின் போதைப்பொருளுடன் இளைஞர்கள் இருவர் கைது

(குருமன்காடு)
வவுனியாவில் இரு வேறு பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கைகளின் போது ஹெரோயின் போதைப்பொருளுடன் இளைஞர்கள் இருவரை கைது செய்துள்ளதாக வவுனியா பொலிஸார் நேற்று தெரிவித்தனர்.

வவுனியா மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவு அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்ட திடீர் நடவடிக்கையின் போது கூமாங்குளம் பகுதியில் 5 கிராம் 140 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன், வேப்பங்குளம் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது 5 கிராம் 100 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட இரு இளைஞர்களிடமும் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளதுடன், கைது செய்யப்பட்ட நபர்களையும் கைப்பற்றப்பட்ட ஹெரோயின் போதைப்பொருளையும் வவுனியா நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்குரிய நடவடிக்கையினை வவுனியா பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (4-5-250)

# ஏலவிற்பனை

(கிளிநொச்சி)
கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் எதிர்வரும் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு மஞ்சள், ஆடுகள் பகிரங்க ஏலவிற்பனை இடம்பெறவுள்ளது.

ஏலவிற்பனைக்கான சான்றுப் பொருட்களினை ஏலவிற்பனை ஆரம்பமாவதற்கு அரை மணித்தியாலத்திற்கு முன்பாக பதிவாளரின் அனுமதியுடன் பார்வையிடலாம் என நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (4-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கற்பகதருவின் பெருமையின் தரமறிந்து தாமறிந்து உலகறிவீர்!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ். பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம் மினிய உறவுகளே!**

வடகிழக்கு மாகாணங்களில் பரந்துபட்டு வளரும் கற்பகதருவாம் பனைவளத்தின் அருமை பெருமையை உலகறியச் செய்வதன் மூலம் எமது இருப்பை தக்கவைக்க வேண்டிய நிலையெமக்கு. இத்தாயக பூமியின் ஒருங்கிணைப்பை சொல்லாமல் சொல்லி நிற்கும் கற்பகதருவின் ஆளுமைக்கு முக்கியத்துவம்கொடுக்க தவறியதால் இன்று இந்த நிலை எமக்கு. இதற்காக வடமாகாணத்தில் வருடந்தோறும் கண்காட்சிகளும் அதனூடாக பனைசார் பொருட்களின் சந்தை வாய்ப்பை குறிப்பாக பனைசார் வாழ்வியலுள் வாழும் மக்களுக்கான அரிய வாய்ப்பாக எமக்குள்ளே உருவாகும் நற்செயலுக்கு பாராட்டுக்கள். ஆடிப்பிறப்பில் பிறப்பெடுத்து கற்பகதரு வள்ளலின் நினைவுநாளில் முடிவுறும் கற்பகதருவிற்கான பெருவிழா இம்முறைகளை கட்டியிருக்கின்றது. ஆடிக்கூழுக்கு பயன்படும்பனைவெல்லம்பிறதேவைகளுக்கும் நம்மவர்கள் பயன்படுத்த வேண்டும் என்னும் செய்தி இதில் முக்கியத்துவம் பெறுகின்றது. மருத்துவக் குணம் கொண்ட பனை வெல்லத்தினை எமது பயன்பாட்டிற்குள் உள்ளடக்குவது எமது கடமையாகிறது. சிறு துண்டு பனைவெல்லத்துடன் தேநீர் குடித்த காலம் வெல்லத்தின் அளவையும் தேவையையும் அனுபவத்தின் கணிப்பாக்கியிருக்கின்றது.

இருக்கின்ற வளத்தை விட்டு விட்டு இல்லாததை தேடிக் கொண்டிருக்கிறோம். கற்பகதரு வெல்லத்தை பயன்படுத்துவதை தவிர்த்து கரும்பு வெல்லத்திற்கு நாமேன் இவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கின்றோம். பலரும் பலமாக சிந்திக்கத் தொடங்கி விட்டதனால் சபையேறி இது பேசுபொருளாகியிருக்கிறது. வெள்ளை வெல்லத்திற்காக நிலத்தடி வெள்ளம் நிர்க்கதியாகும் நிலையை ஆய்வாளர்கள் அன்றே சொல்லி வைத்து விட்டார்கள். அதனால் அன்றைய குறுநில மன்னர் அரசாணையில் இவ்வகை முன்னெடுப்புக்கு மறுப்பு தெரிவிக்கப்பட்டது.

வயது வேறுபாடின்றிபாலின வேறுபாடின்றி அனைவருக்கும் ஏற்படும் நீரிழிவு நோயின் தீவிர தன்மையை உணர்ந்தும் வெல்லத்தின் பாவனையை கட்டுப்படுத்தும் வழிவகைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காது தேவையின் பால் கற்பகதருவின் வெல்லத்தை பயன்படுத்த ஊக்குவிக்காது அதனை இன்னும் மதிப்பேற்றம் செய்து புதிய பொருளாக உலக சந்தையில் வலம் வர வாய்ப்பினை ஏற்படுத்தாது வெள்ளை வெல்லத்தை அதிகளவில் உற்பத்தி செய்வதன் நோக்கத்தை இன்னமும் மக்கள் புரிந்து கொண்டிலர். அந்நியச் செலாவணியை இவ்வாறான தொழிற்றுறை அபிவிருத்தி மூலம் பெருக்குவதிலுள்ள பாதக நிலையை அவசியம் அறிந்திருக்க வேண்டும்.

இருப்பினும் மறைந்த வள்ளல் மில்க் வைற் தொழிலதிபர் கலாநிதி கனகராசாவின் நன் முயற்சியால் வடபுலமெங்கும் பல இடங்களில் நாட்டப்பட்ட பனைகள் ஓங்கி வளர்ந்து நிற்கும் நிலை கண்கொள்ளாக் காட்சியாக இருக்கின்றது. பெருமனிதர் செம்மணியில் சாலையோரம் வரிசையில் நாட்டிய பனைகளின் நுங்கு ஏறு திறனுள்ளவருக்கு வாழ வழிகாட்டி பலரது தாகத்தையடக்கியது. யாழ்ப்பாணத்து சவர்க்கார தொழிற்சாலையை உருவாக்கி எம்மவர்கள் ஒருகாலம் அதனையே பயன்படுத்திய பாங்கு இலகுவில் மறக்கத்தக்கதன்று. பாதையெங்கும் பார்த்து பார்த்து நடவு செய்யப்பட்ட பனைகள் இன்று நீண்டு நிமிர்ந்து வளர்ந்து தனக்குரிய இறுமாப்புடன் காணப்படுவது அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தருகின்றது. சுயநலம் பாராது அன்னார் செய்த நற்காரியம் இன்று பல இடங்களில் காணக் கிடைக்கின்றது. இருந்தாலும் இறந்தாலும் பனையின் பயன்பாடும்பெரிது. மகத்துவமும்பெரிது. அதுபோல மறைந்தும் பனை மரத்தினூடே உயிர் கொண்டெழுந்திருக்கும் பெரியவரை நினைவுகூரும் இவ்வாரம் சிறப்புக்குரியது.

வரண்ட வலயத்துக்குரிய தென அடையாளப்படுத்தினாலும் பனையின் மகத்துவம் அளப்பரியது. பனை என்பது விஞ்ஞானத்தின் பார்வையில் வெறும்ஒரு வித்திலை மரமல்ல, விருட்சம். பனை என்பது வெறும் ஜடமல்ல. அது ஒரு சூழலின் தோற்றுவாய்.

பனை என்பது பத்தில் ஒன்றல்ல. அது ஒரு தல விருட்சத்தின் உருவகம். பனை என்பது ஈரெழுத்து மட்டுமல்ல தான் கொண்ட சமூகத்தின் உயிரெழுத்து. வடகிழக்கு மாகாணங்களின் வாழ்வின் அடையாளங்களில் முக்கியமானது. இதனை பெயர்த்தெடுத்து காலிமுகத்திடலில் நடவு செய்த போதும் இருந்தபடியே இருக்கிறது இன்றும். உயிர்பல்வகைமையில் தான் கொண்ட சூழலை மாற்றி எந்த உயிரினமும் விருத்தி கண்டதில்லை. அந்த விஞ்ஞான கோட்பாட்டைஅனுபவமாக்கி இதில் காணலாம்.

பனையென்பது ஒரு வித்திலையின் உயர்ச்சி. கற்பகதருவாக கொள்ளப்படுகின்ற பனையின் பயன்பாடு மிகவும் உன்னதமானது. வடகிழக்கு பகுதிகளைப் பொறுத்த வரையில் பனைவளம் மிக்கதாக காணப்படுவதுடன் பாதுகாக்கப்பட வேண்டியதாகவும் இருக்கின்றது. பனை மரங்கள் செழிப்பாக காணப்படுகின்ற இடங்களில் நாம் எதிர்பார்த்த சூழல் பேணப்படுகின்றது எனலாம். எமது வாழ்வியல் பனை சார்ந்த சூழல் தொகுதியினுள்ளேயே உள்வாங்கப்பட்டிருக்கின்றது என்பதே யதார்த்தம். இயற்கையின் சுகத்தை அனுபவிக்காத நகரவாசிகளுக்கு நிச்சயமாக இதனது அருமை தெரியவராது. என்றாலும்உண்ண உணவாக, உறையுளாக, உடையாக இன்னும் பலவழிகளில் பனையின் பெறுமதி உள்ளார்ந்திருக்கின்றது.

ஆனால்பல்லாண்டுகாலமாக இருந்த அசாதாரண சூழ்நிலை மாறி இந்த மண் அபிவிருத்தி காண துடிக்கின்ற போது தானாக முளைத்திருக்கும் பனையை குறிப்பாக வடலிகளை இரும்புக் கரங்கள் கொண்டு பிடுங்கியழித்து விட்டு அதே குடும்பத்தைச் சேர்ந்த தென்னையை நடவு செய்கின்றார்கள். அண்ணனை பிடிங்கி வெளியே எறிந்து விட்டு தம்பியை நடவு செய்வதற்கு ஒப்பானது இது. ஒரு குடும்பத்து (தாவர வகைப்படுத்தலில் பாமேசியே என்னும் குடும்பத்துள் பனையும் தென்னையும் உள்ளடக்கப்படுகின்றன.) உறவுகளுக்குள் ஏனிந்த பாகுபாடு. இது பனைக்கான முக்கியத்துவத்தை நாம் ஏற்படுத்திக் கொடுக்காததனால் ஏற்பட்ட விளைவாகும். பனையின் பயன்பாடுகளை ஆய்வு ரீதியாக ஆக்கபூர்வமான பல்வகைப் பொருட்கள் ரீதியாக அந்நியச் செலாவணி ரீதியாக தொழில்நுட்பம் சார்ந்து முன்னோக்கி நகர்த்தாததன் எதிரொலியாகவும் இதனைக் கருதலாம். தென்னையை நடுவதனால் பிற்காலத்திற்கு அதன் பயன் கிடைக்கும் என்பதற்கு மேலாக பனையிலிருந்து கிடைக்கும் பயன்பாடுகளை நாம் அதே இலாபத்துடன் சந்தைப்படுத்த முடியாதிருப்பதும் இன்னொரு காரணமாகும். பனை, தென்னை பயன்பாடுகளை முழுவதுமாக அறிந்துணராத நிர்ப்பந்தத்தினால் ஏற்பட்ட நிலையிது.

பனையின் சிறப்புக்கள் பற்பல. மரம் முழுக்க முழுமையாக மனிதனுக்கு பயன்படக்கூடியது என்பதனாலேயே இதற்கு இவ்வளவு சிறப்பும். ஓங்கி வளர்ந்து, தனித்து நின்று ஓங்கியடிக்கும் காற்றுக்கும் சுழற்றியடிக்கும் சூறாவளிக்கும் தாக்குப்பிடிக்கும் மரம் என்பதுடன் வெள்ளத்திலும் கால்பதித்து நிற்கும் தன்மை வாய்ந்தது என்பது இந்த அடைமொழிக்கு உரிமையானதாகின்றது. பனை மரத்திற்கு மறுக்கப்படும் அந்தஸ்து இங்குள்ள மனிதருக்கு மறுக்கப்படும் உரிமைக்கானதாகும். தமிழ்நாட்டின் மரமாக பனை அங்கீகரிக்கப்பட்டிருக்கும் போது வடமாகாண சபையின் மரமாக பனைக்கு அந்த உரிமம் மறுக்கப்பட்டிருக்கின்றது. மருது மரத்திற்கு அந்த உரிமை கொடுக்கப்பட்டு அதற்கு கிடைத்த பேரதிர்ஷ்டம் பனை மரத்திற்கு கிடைக்கவில்லை.

பனைஎமது சொத்து. அதனை நாம் பாதுகாக்க தவறினால் இயற்கையின் சீற்றத்திற்கு நாம் உள்ளாக வேண்டி வரும் என்பதனையும் நாம் கவனத்திற் கொள்ளவேண்டும் எமதுசூழலை நாம்பாதுகாப்பது போலன்றிவராது. நிஷா புயல்வந்த போதும் சுனாமி வந்த போதும் கரையோரத்தில் பல உயிர்களை பனை காத்திருக்கின்றது என்பதனை அந்த அனர்த்தத்திற்குள் சிக்கியவர்களைக் கேட்டால் தெரியவரும். எமக்கு நல்லனவற்றைத் தருகின்ற பனையை நாம் தெய்வமாக பாதுகாக்க வேண்டும். வெட்டிச் சரித்து கொண்டாடக்கூடாது. இயற்கையை அனுசரித்து நாம் வாழப் பழகவில்லையாயின் அதன் பின்வரும் அனைத்து துன்பங்களுக்கும் முகங்கொடுக்க தயாராகவும் வேண்டும்.


இயக்கச்சியிலிருந்து பளை நோக்கி ஏ9 பாதையில் பயணிப்பவர்களுக்கு பாதையோரத்தில் பனையும் அரசமரமும் அல்லது பனையும் ஆலமரமும் இணைந்திருக்கும் காட்சி நிச்சயம் தட்டுப்படும். தனித்தனியே இருக்கக்கூடிய இரு விருட்சங்களும் இணைந்திருக்கின்ற விசித்திரமென்ன? ஒரு குறிப்பிட்ட சிறிய நிலப்பரப்பில் இரு விருட்சங்களும் ஒன்றாக இணைந்து எமக்கு இயற்கையின் செய்தியாக சொல்கின்ற செய்தியென்ன? இரண்டும் இரு வகைகளைச் சார்ந்தன. ஒன்று ஒரு வித்திலை (பனை) மற்றையது இரு வித்திலை தாவரம். இருப்பினும் தமக்கான அடையாளங்களை உயர்த்தி வெளிப்படுத்தி ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து அவரவர் தனித்துவத்தை வெளிக்காட்டி நிற்கும் விந்தையை இயற்கை நமக்குப் பாடமாகக் கற்றுக் கொடுக்கின்றது. பனை சூழல் தொகுதியில் இன்னொரு மரத்தையும் இணைத்து பல்வகைத்தன்மையை இனங்காட்டி அதிலும் தான் உயர்ந்து வளர்ந்து தனது அடையாளத்தைக் காட்டி நிற்பதை காணுங்கள்.

இன்னொரு செய்தியும் அடங்கியிருக்கின்றது. வளர்ந்திருக்கும் பனை மரத்தில் பறவைகள் வந்திருந்து எடுத்து வந்த அரச மர, ஆலமர பழங்களை கொத்தித் தின்னும் போது அதிலிருந்து விழுகின்ற விதைகள் பனை மர இடுக்குகளில் தங்கி அங்கிருந்து வளரத் தொடங்குகின்றன. ஆக மொத்தத்தில் இந்த இரு விருட்சங்களின் இவ்வாறான இருப்புக்கு பறவையின் (மூன்றாம் தரப்பின்) உதவி தேவைப்படுகின்றது என்பதும் வெளிப்படையாகின்றது. இதுவும் எமக்கான செய்தியாகவும் பாடமாகவும் இருக்குமோ எனவும் எண்ணத் தோன்றுகின்றது.

இயற்கையின் கொடையாக எமக்கு கிடைத்த பொக்கிஷமே கற்பகதரு. இயற்கையின் வனப்பில் பனை மரங்களின் சலசலப்பில் அதனது சுகந்தத்தை அனுபவிக்க கிடைத்தவர்கள் பேறுபெற்றவர்களாவர். எமக்காக இயற்கை தந்த அரும் கொடையை பாதுகாக்க அமரர் கனகராசா எடுத்த முயற்சிக்கு நாம் கொடுக்கும், கொடுக்கின்ற மதிப்பும் மரியாதையுமே அவரின் ஞாபகமாக இவ்வாரத்தில் பனைக்கான வாரமாக கொண்டாடுவது.

இந்த முயற்சிக்கு எம்மாலான ஆதரவை கொடுப்பதுடன் வடபுலத்து மக்களின் வாழ்வியலுடன் இரண்டறக் கலந்திருக்கின்ற பனையின் விருத்திக்கு நாம் அனைவரும் தொடர்ந்து பாடுபடுவதுடன் பனை பற்றிய நல்ல செய்திகளை மக்களுக்கு அறியத் தருவதுடன் அதனது பயன்பாட்டையும் நாம் விரிவுபடுத்துவோமாக.

## இனியொரு பசுமைப்புரட்சிக்கு...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடி மாத இராசி பலன்கள்

## 17.07.2023 - 17.08.2023



எதையும் மனநிறைவோடு செய்ய வேண்டும் என்று சொல்லும் மிதுன இராசி வாசகர்களே!

ஆடி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் புதன் தன ஸ்தானத்தில் சகாய ஸ்தானாதிபதி சூரியனோடு இணைந்து சஞ்சரிப்பதால் ஆரோக்கியத் தொல்லை அகலும். அடுத்தவர் நலன் கருதி எடுத்த முயற்சியில் ஆதாயம் கிடைக்கும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். பாக்கிய ஸ்தானத்தில் சனி வக்கிரம் பெற்றிருப்பதால் பிள்ளைகளால் சில பிரச்சினைகள் உருவாகலாம். பூர்வீகச் சொத்துக்களில் ஏற்பட்ட பஞ்சாயத்துக்கள் தாமதப்படும். திசாபுத்திக் கேற்ற தெய்வ வழிபாடு கைகொடுக்கும்.

**மேஷ - குரு சஞ்சாரம்**

நவக்கிரகங்களில் சுபகிரகம் என்று சொல்லப்படும் குரு பகவான், உங்கள் இராசிக்கு தொழில் ஸ்தானாதிபதியாக இருப்பவர். அவர் ராகுவோடு இணைந்து லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். அவரது பார்வை 3, 5, 7 ஆகிய இடங்களில் பதிகின்றது.

எனவே சில நல்ல மாற்றங்களும் வரலாம். பாகப்பிரிவினைகளில் இருந்த தேக்க நிலை மாறும். தெளிந்த சிந்தனையோடு செய்யும் செயல்களில் வெற்றி கிடைக்கும். உடன்பிறப்புகளால் ஒருசில நல்ல காரியம் நடைபெறும். குருவின் பார்வை பலத்தால் பூர்வ புண்ணிய ஸ்தானம் மற்றும் களத்திர ஸ்தானம் புனிதமடைகின்றன. எனவே, இல்லத்தில் கல்யாணம் போன்ற சுபநிகழ்வுகள் நடைபெறும். பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சியில் வெற்றி கிடைக்கும். குடும்பத்தில் உள்ள குழப்பங்கள் படிப்படியாக விலகும். பெற்றோரின் மணிவிழாக்கள் போன்றவை நடைபெறும். உறவினர்களின் ஒத்துழைப்பு திருப்தி தரும். பூர்வீகச் சொத்துக்களை விற்றுவிட்டு புதிய சொத்துக்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். ஆபரணச் சேர்க்கை உண்டு.




**சிம்ம - புதன்**

ஆடி 7 ஆம் திகதி, சிம்ம இராசிக்குப் புதன் வருகின்றார். உங்கள் இராசி மற்றும் சுக ஸ்தானத்திற்கு அதிபதியான புதன், சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரம் நல்ல நேரமாகும். எல்லா வழிகளிலும் உங்களுக்கு நன்மைகள் கிடைக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயர்பதவிகள் கிடைக்கும். ஆரோக்கியம் சீராகி உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள். வாகனம் வாங்கி மகிழ்வதுடன் வீடு, இடம் வாங்குவதிலும் அக்கறை காட்டுவீர்கள்.

வெளிநாட்டில் உள்ள நல்ல நிறுவனங்களில் பணிபுரிய அழைப்புகள் வரலாம். மாமன் - மைத்துனர் வழியில் நடைபெறும் மங்கல நிகழ்ச்சியை முன்னின்று நடத்துவீர்கள். சேமிப்பு அதிகரிக்கும். பொதுவாழ்வில் உள்ளவர்களுக்குப் புதிய திருப்பங்கள் ஏற்படும்.

வியாபாரம், தொழில் செய்பவர்களுக்கு எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு மேல்திகாரிகளின் கெடுபிடி அதிகரிக்கும். கலைஞர்களுக்கு விட்டுப்போன வாய்ப்புகள் மீண்டும் கிடைக்கும். மாணவ - மாணவிகளுக்கு கவனச் சிதறல் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுங்கள். பெண்களுக்கு பக்கத்து வீட்டாரின் பகை மாறும். கரைந்த சேமிப்புகளை ஈடு கட்டுவீர்கள். பிள்ளைகளின் கல்வி முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சி வெற்றி தரும்.

## செய்யும் செயல்களில் வெற்றி கிடைக்கும்!

**ஜோதிடக் கலாமணி**
**சிவல்புரி சிங்காரம்**



எப்போதும் ஏதாவது ஒரு சிந்தனையிலேயே இருக்கும் கடக இராசி வாசகர்களே!

ஆடி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம் இருப்பதோடு சனியை, செவ்வாய் பார்க்கும் அமைப்பும் உள்ளது. எனவே அலைச்சலைக் குறைத்துக் கொள்ளுங்கள். அதிக விரயங்கள் மனக்கவலையை உண்டாக்கும். இரவு நேரப் பயணங்களை மாற்றிக் கொள்வது நல்லது. பக்கத்தில் உள்ளவர்கள் பக்கபலமாக இருக்க, விட்டுக் கொடுத்துச் செல்வதோடு பணியில் உள்ள மேலதிகாரிகளையும் அனுசரித்துச் செல்லுங்கள்.

10 இல் குரு இருப்பதால் புதவி மாற்றம், உத்தியோக மாற்றம், இடமாற்றம் போன்றவை தானாக வந்து சேரும். வரும் மாற்றங்களால் நன்மை உண்டு.

**மேஷ - குரு சஞ்சாரம்**

நவக்கிரகத்தில் சுபகிரகமான குரு பகவான், இப்பொழுது மேஷ இராசியில் சஞ்சரிக்கிறார். 10 இல் குரு வந்தால் பதவியில் மாற்றம் வரும் என்பது பழமொழி. ராகுவோடு இணைந்திருக்கும் குரு பகவான், கேதுவைப் பார்க்கிறார். எனவே வரும் மாற்றம் நல்ல மாற்றமாக அமைய, வியாழக்கிழமை தோறும் விரதமிருந்து குரு பகவானை வழிபாடு செய்யுங்கள். எப்படி இருந்தாலும் குருவின் பார்வைக்கு பலன் உண்டு.

அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது குருவின் பார்வை உங்கள் இராசிக்கு 2, 4, 6 ஆகிய இடங்களில் பதிகின்றது. குடும்ப ஸ்தானத்தில் குருவின் பார்வை பதிவதால் சுபகாரியங்கள் நல்ல முடிவிற்கு வரும். வீட்டிற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களையும் ஆடம்பரப் பொருட்களையும் வாங்கிச் சேர்ப்பீர்கள். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்திணைவர்.

கொடுக்கல் வாங்கல்களில் இருந்த தடுமாற்றங்கள், பிரச்சினைகள் படிப்படியாய் மாறும். குருவின் பார்வை சுக ஸ்தானத்தில் பதிவதால் ஆரோக்கியம் சீராகும். வீடு மாற்றம், இட மாற்றம் மகிழ்ச்சி தரும். நல்ல காரியங்கள் படிப்படியாக நடைபெற வழிபிறக்கும். 6 ஆம் இடத்தையும் குரு பார்ப்பதால் உத்தியோக முன்னேற்றம் உண்டு. ஒரு சிலர் விருப்ப ஓய்வு பெற்றுக் கொண்டு சுயதொழில் தொடங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவர்.




கடன்சுமை பாதிக்கு மேல் குறைய புதிய வழிபிறக்கும். வாழ்க்கைத் தரம் உயர புதிய முயற்சி எடுப்பீர்கள்.

**சிம்ம - புதன்**

ஆடி 7 ஆம் திகதி, சிம்ம இராசிக்குப் புதன் வருகிறார். உங்கள் இராசிக்கு 3, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் தன ஸ்தானத்திற்கு வரும் பொழுது நன்மை - தீமைகள் கலந்தே நடைபெறும். குறிப்பாக வருமானம் உயரும். ஒரு சிலருக்கு வீடுமாற்றம், இடமாற்றம் வரலாம். தூர தேசத்திலிருந்து வரும் வேலைக்கான அழைப்புகளை ஏற்றுக் கொள்ளலாமா? என்று சிந்திப்பீர்கள். உத்தியோகத்தில் உங்களிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்புகளை மற்றவர்களிடம் கொடுக்க வேண்டாம்.

உங்கள் முன்னேற்றத்தையும் முன்னதாகவே சொல்வதன் மூலம் பாதிப்புகள் ஏற்படும். வாகனப் பழுதுகளும் வாகன மாற்றங்களும் வந்து சேரும் நேரம் இது. பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு போராடி வெற்றி பெறும் யோகம் உண்டு.

வியாபாரம், தொழில் செய்பவர்கள் போட்டிகளைத் தாண்டி லாபம் குவிப்பீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்கள் மேலதிகாரிகளை பகைத்துக் கொள்ள வேண்டாம். கலைஞர்களுக்கு புதிய ஒப்பந்தங்கள் வந்துசேரும். மாணவ - மாணவிகளுக்கு படிப்பில் கூடுதல் கவனம் தேவை. பெண்களுக்கு விரயங்கள் அதிகரித்தாலும் வருமானம் ஓரளவு வந்து கொண்டே இருக்கும். பணிபுரியும் பெண்களுக்கு கேட்ட இடத்திற்கு மாறுதல்கள் கிடைக்கும்.

## சுபகாரியங்கள் நல்ல முடிவிற்கு வரும்!

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 233





"ஆரம்பித்து விட்டாயா, உன் கதையை? வந்தியத்தேவன் பேரில் ஏதாவது சொல்லிக் கொண்டிராவிட்டால் உனக்குப் பொழுது போகாது. அவனுக்குப் புத்திக்கூர்மையில்லாவிட்டால் வேறு யாருக்கு இருக்கிறது? எந்த விதத்திலாவது, எப்படியாவது, சக்கரவர்த்தியிடம் நேரில் ஓலையைக் கொடுத்து விட வேண்டும் என்று நான் இட்ட கட்டளையை அவன் நிறைவேற்றி விட்டான். அதனால் பழுவேட்டரையர்கள் கோபங் கொண்டிருக்கிறார்கள். இதில் வந்தியத்தேவனின் தவறு என்ன?" என்று ஆதித்தகரிகாலன் கேட்டான்.

"தாங்கள் சொல்லி அனுப்பிய காரியத்தோடு அவன் நின்றிருக்க மாட்டான். வேறு வேண்டாத காரியங்களிலும் தலையிட்டிருப்பான்!" என்றான் பார்த்திபேந்திரன்.

"நீ சற்றுச் சும்மாயிரு! தாத்தா! ஏன் இப்படி மௌனமாயிருக்கிறீர்கள்? தங்களுடைய கருத்து என்ன? ஒரு பெரும் படை திரட்டிக் கொண்டு சென்று தஞ்சாவூரிலிருந்து சக்கரவர்த்தியை மீட்டு காஞ்சிக்கு அழைத்து வந்துவிட்டால் என்ன? எத்தனை நாள் சக்கரவர்த்தியைப் பழுவேட்டரையர்கள் சிறையில் வைத்திருப்பது போல வைத்திருப்பதை நாம் பார்த்துக் கொண்டிருப்பது? எத்தனை நாள் பழுவேட்டரையர்களுக்குப் பயந்து காலம் கழிப்பது?" என்று பொங்கினான் ஆதித்த கரிகாலன்.

தம் வாழ்நாளில் அறுபத்தாறு போர்க்களங்களைக் கண்டு அனுபவம் பெற்றவரான திருக்கோவலூர் மலையமான் - மிலாடுடையார் - மறுமொழி சொல்லுவதற்காகத் தொண்டையைக் கனைத்துக் கொண்டார். இதற்குள் எதிரே கடல் அலைகள் தெரியவும், "முதலில் இந்த ரதத்திலிருந்து இறங்குவோம் தம்பி! வழக்கமான இடத்தில் போய் உட்கார்ந்து பேசுவோம். எனக்கு வயது ஆகி விட்டதல்லவா? ஓடுகிற ரதத்தில் பேசுவது எளிதாக இல்லை" என்றார்.


### ஐம்பத்திரெண்டாம் அத்தியாயம்
### கிழவன் கல்யாணம்

மாமல்லபுரத்துக் கடற்கரையில் சிறிய சிறிய கற்பாறைகள் பல உண்டு. சில சமயம் கடல் பொங்கி வந்து அப்பாறைகளின் மீது அலைகள் மோதிக் கொண்டிருக்கும். சில சமயம் கடல் பின்வாங்கிச் சென்று அப்பாறைகள் உலருவதற்கு அவகாசம் அளிக்கும். அவற்றில் ஒரு சிறிய பாறையையேனும் மாமல்லபுரத்து மகா சிற்பிகள் சும்மா விட்டுவிடவில்லை. அந்தந்தப் பாறைக்குத் தகுந்தபடி பெரிதாகவும் சிறிதாகவும் காட்சிகளைக் கற்பனை செய்து அழியாச் சிற்ப உருவங்களை அமைத்து வைத்தார்கள்.

அவ்விதம் சிறிய பாறைகள் இரண்டு எதிரெதிராக அமைந்திருந்த இடத்தை ஆதித்த கரிகாலனும் மற்ற இருவரும் அணுகினார்கள். ரதத்திலிருந்து இறங்கிச் சென்றார்கள். இரண்டு பாறைகளையும் இரண்டு சிம்மாசனங்களாகக் கருதி, கரிகாலனும் மலையமானும் அமர்ந்தார்கள். பார்த்திபேந்திரன் அவர்களுக்குச் சற்று அப்பால் நின்றான். அடிக்கடி அலைகள் வந்து அவர்களுடைய முழங்கால் வரையில் நனைத்துக் கொண்டிருந்தன. அலைகள் பாறைகளில் மோதிய போது எழுந்த திவலைகள் சில சமயம் அவர்கள் மீது முத்து மழையாகப் பொழிந்து கொண்டிருந்தன. சற்றுத் தூரத்தில் படகுகள் வரிசை வரிசையாகப் பல்வகைப் பண்டங்களைச் சுமந்து கொண்டு கடலைக் கிழித்துக் கொண்டு சென்றன. அப்பண்டங்களைப் படகிலிருந்து இறக்கிப் பாய் மரம் விரித்து நின்ற பெரிய மரக் கலங்களில் ஏற்றிக் கொண்டிருந்தார்கள்.


"இரட்டை மண்டலப் படையெடுப்புக்காகச் சேகரித்து வைத்த பண்டங்களெல்லாம் இலங்கைக்குப் போக வேண்டியிருப்பதை நினைத்தால் என் நெஞ்சம் கொதிக்கிறது!" என்றான் பார்த்திபேந்திரன்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## குகையுடன் பேசிய நரி



ஒரு காட்டில் கிரகிரன் என்ற சிங்கம் வாழ்ந்து வந்தது. ஒரு நாள் இரை தேடி காட்டின் பல பகுதிகளிலும் அலைந்து திரிந்தும் அதற்கு ஒரு சிறிய இரை கூடக் கிடைக்கவில்லை. வழியில் ஒரு பெரிய குகையினைக் கண்டது. உடனே, சிங்கத்திற்குஒரு யோசனை பேசாமல் நாம் இந்தக் குகைக்குள் ஒளிந்து கொண்டால், இந்த குகையில் இருக்கும் விலங்குகள் இரை தேடி விட்டுத் திரும்பி மீண்டும் இங்கே தானே வரும். அப்படி வரும் விலங்குகளைப் பிடித்து உண்டு விடலாம் என்று நினைத்து அந்தக் குகைக்குள் சென்று படுத்துக் கொண்டது.

அந்தக் குகையில் அவிபுச்சன் என்கிற ஒரு புத்திசாலியான நரி வசித்து வந்தது. தன் குகைக்குத் திரும்பி வந்து தன் குகைக்குள் நுழைய முனைந்த போது குகையின் வாசலில் சிங்கத்தின் காலடித் தடங்கள் இருப்பதனைப் பார்த்து குகைக்குச் சிங்கம் ஒன்று வந்திருக்கிறது என்பதை அறிந்து கொண்டது. ஆனால் நரிக்கு ஒரு சந்தேகம்? சிங்கம் உள்ளே இருக்கிறதா? அல்லது "சென்று விட்டதா? என்பதைத் தெரிந்து கொள்வதற்காக குகைக்கு வெளியேநின்று கொண்ட நரி, ஏய், குகையே! ஏய், குகையே! என்று அழைத்தது.

சிங்கம் எழுந்தது. வெளியே ஒரு நரி இருப்பதனை அறிந்து கொண்டது. அது யாரிடம் பேசுகிறது என்று சுவனித்தது.

நரி, மீண்டும், ஏய், குகையே ஏன் மௌனமாக இருக்கிறாய்? என்றது. சிங்கத்திற்கு ஒன்றும் புரியவில்லை. ஏன் இந்த நரி குகையிடம் பேசுகிறது? என்று யோசித்தது. நரி, குகையே என் மீது ஏதும் கோபமா? நீ தினமும் என்னிடம் பேசுவாயே? இன்று ஏன் என்னுடன் பேசாமல் அமைதியாக இருக்கிறாய்? என்று கேட்டது. அப்போதுதான் சிங்கத்திற்குப் புரிந்தது. அடடா! இந்தக் குகை தினமும் நரியுடன் பேசக்கூடியது போலும். ஆனால், இன்று ஏனோ இது பேசவில்லை என்று நினைத்தது.

நரி, ஏய், குகையே! நீ பேசிய பின்னர் தானே நான் உன்னுள் நுழைவேன். இன்று நீ பேசாமல் இருந்தால் நான் எப்படி உன்னுள் நுழைவேன்? என்றது.

சிங்கம் பதறிப் போனது. அடடா! குகை பேசினால் தான் நரி குகைக்குள் வருமாமே! நரி குகைக்குள் வராவிட்டால் நமக்கு இரை கிடைக்காதே! என்று நினைத்த சிங்கம் குகை போல நாமும் அதை பேசினால், அந்த நரி குகைக்குள் வந்து விடும். நாமும் அதை அடித்துச் சாப்பிட்டு விடலாம்! என்று நினைத்து, ஏ நரியே! நான் வேறு சிந்தனையில் இருந்ததால் உன்னிடம் பேசவில்லை. தவறாக நினைக்காதே.

வா உள்ளே! என்று குகை பேசுவது போல பேசி குரல் எழுப்பியது. அவ்வளவுதான். குகைக்குள் இருந்து சிங்கத்தின் குரல் வெளிவந்ததும் சுதாரித்துக் கொண்ட நரி, தப்பித்தோம் பிழைத்தோம் எனத் தலைதெறிக்க ஓடிப் போனது. எதனையும் செய்வதற்கு முன்பு ஆலோசித்துச் செய்ய வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறாத மரத்தை வேலைக்கு அதிகமாக உப யோகிக்கக் கூடாது.அது போலத்தான் பண் படாத அறிவும். – *ஹோம்ஸ்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மாணவரை வழிப்படுத்த வேண்டுமாயின் ஆசிரியர் சிறை செல்ல வேண்டும்

ஒரு பாடசாலை திறக்கப்படும்போது ஆயிரம் சிறைச்சாலைகள் மூடப்படும் என்றனர் நம் முன்னோர்கள்.

ஆம், பாடசாலைகள் மாணவர்களைப் பக்குவப்படுத்தும்போது குற்றச் செயல்கள் இல்லாமல் போக, சிறைச்சாலை தேவை யற்றதாகிவிடும் என்பது மேற்போந்த கருத் தின் பொருள்.

ஆயினும் இன்று பாடசாலைகளும் மலிந்து விட்டன. சிறைச்சாலைகளும் அதிகரித்துள் ளன.

இங்கு மேலே குறிப்பிட்ட தியறி தோற்றுப் போயுள்ளதை உணர முடியும்.

அதாவது, பாடசாலைகள் மாணவர்களை வழிப்படுத்துகின்ற நிலையில் இருந்து விலகி விட்டதென்பதன் காரணமாகவே சிறைச் சாலைகள் புதிதாக அமைக்கப்பட வேண்டிய தேவை ஏற்படுகிறது.

இங்குதான் ஓர் விடயத்தை நாம் சிலா கிக்க வேண்டியுள்ளது.

அதாவது மாணவர்களைத் தண்டிப்பது என்பது சிறுவர் உரிமை மற்றும் மனித உரிமை கள் மூலமாக தண்டனைக்குரிய குற்றமாக ஆக்கப்பட்டுள்ளது.

அதுதவிர, மாணவர் தண்டிக்கப்பட்டால், அது தொடர்பில் தண்டித்த ஆசிரியர் அல் லது அதிபர் உடனடியாகக் கைது செய்யப் படுகின்ற சட்ட ஏற்பாடுகளும் உண்டு.

ஆக, இலங்கையில் உள்ள எந்த அரச உத்தியோகத்தர்களுக்கும் இல்லாத மிகப் பெரிய சவாலும் ஆபத்தும் அதிபர் ஆசிரியர் களுக்கு உண்டு என்பது நிராகரிக்க முடியாத உண்மை.

பொதுவில் எமது கல்விப் பாரம்பரியம் என்பது அடித்துப் படிப்பித்தல் என்ற நடை முறைக்கூடாக அமுலாகி இருந்தது.

அதேநேரம் கல்வியில் கவனத்தை முழுமை யாக ஈடுபடுத்தாத மாணவரைத் தண்டிக்கும் போது, அந்த மாணவர் தண்டனைக்கு அஞ்சி குறித்த பாடத்தின்மீது கவனம் செலுத்துவது, வீட்டுக்குச் சென்று பாடங்களைப் படிப்பது, ஆசிரியரால் தரப்பட்ட வீட்டு வேலைகளைச் செய்வது எனும் ஒழுங்குமுறைக்குள் மாண வர்கள் வந்து விடுகின்றனர்.

இவ்வாறு ஆசிரியரின் நேரடி மேற்பார்வை யில்லாமலே மாணவர்கள் வீட்டில் படித்தல் என்ற ஒழுங்குமுறை அமுலாகிறது. இவ் அமு லாக்கம் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு தண்டனை வழங்குவதினூடு ஏற்படுத்தப்பட்டது.

இவ்வாறு ஆசிரியர்கள் வழங்குகின்ற தண்டனை மாணவர்களின் நலன்கருதிய தாக இருந்தபோது, அதனைப் பெற்றோர் களும் ஏற்றுக் கொண்டனர்.

இருந்தும் சில இடங்களில் அதிபர், ஆசிரி யர்களின் மனவெழுச்சியும் பகைமை உணர் வும் மாணவர்களைத் தண்டிக்கின்ற விடயங் களில் செல்வாக்கு செலுத்தின. இவ்வாறான சூழ்நிலையில்தான் மாணவர்களுக்குத் தண் டனை வழங்குவது குற்றச் செயலாகப் பிர கடனத்தப்பட வேண்டியதாயிற்று.

எது எவ்வாறாயினும் ஒரு பாடசாலை யைத் திறக்கும் போது ஆயிரம் சிறைச்சாலை மூடப்படும் என்ற தத்துவம் தலைகீழாக மாறி, ஒரு மாணவனை திருத்தும் பொருட்டு தண் டிக்கப் போய் ஓர் ஆசிரியர் சிறைக்குச் செல்லு கின்ற மிக மோசமான நிலைமை ஏற்பட்டி ருப்பதுதான் வேதனைக்குரிய விடயம்.

ஆக, மாணவர்களைத் தண்டித்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் அதிபர், ஆசிரியர் களைச் சிறையில் அடைப்பதென்பது மறு சீரமைக்கப்பட வேண்டிய விடயம்.

அதேநேரம் இதைச் செய்யாதவிடத்து மாணவர்களை வழிப்படுத்துவதில் ஆசிரியர் களின் வகிபங்கு பூச்சியம் என்ற பெறுமானத் தைச் சுட்டி நிற்கலாம்.

இவ்வாறான ஓர் இக்கட்டான சூழ்நிலை யில் மாணவர்களின் வழிப்படுத்தல் தொடர் பான ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்போது,

சிறைக்குச் செல்லும் அதிபர், ஆசிரியர் களின் எண்ணிக்கை அதிகரிக்கும்போது மாண வர்களின் வழிப்படுத்தல் உயர்வான பெறு மானத்தில் இருந்தது என்ற முடிவுகள் கூட எட்டப்படலாம்.

# உள்ளகக் கடன் மறுசீரமைப்பு

# பொருளாதார மீட்சிக்கு சாதகமானது

## உலக வங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பணிப்பாளர்

(கொழும்பு)

உள்ளகக் கடன் மறுசீர மைப்புக்கு பாராளுமன்ற அங்கீகாரமானது இலங் கையின் பொருளாதார மீட்சிக்கு சாதகமானதென உலக வங்கியின் இலங் கைக்கான வதிவிட பணிப் பாளர் பாரிஸ் ஹடட் செர் வோஸ் தெரிவித்தார்.

ஹில்டன் ஹோட்ட லில் நேற்று செவ்வாய்க் கிழமை பத்திரிகை ஸ்தா பனத்தின் ஊடக மையம் ஏற்பாடு செய்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே மேற் கண்டவாறு தெரிவித்தார்.

இதேவேளை, இலங் கையின் பொருளாதாரத்தை மையப்படுத்திய அனைத்து மறுசீரமைப் புகளும் அத் தியாவசியமானவை என வும் உலக வங்கியின் இலங்கைக்கான வதிவிட பணிப்பாளர் தெரிவித்தார்.

இலங்கையில் தற் போது அரசியல் பேசும் நேரமில்லையெனவும் மக்களிடம் உண்மையான விடயத்தை எடுத்துக் கூறு மாறும் கேட்டுக்கொண் டார். அத்துடன் மத்திய வங் கியின் சுயாதீன தன்மை அவசியம் என்பதையும் சுட்டிக் காட்டினார். (ம-7)

## யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் மீது தாக்குதல்

### 7 பேர் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்க லைக்கழக மாணவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 07 மாணவர் கள் காயமடைந்துள்ள னர்.

யாழ்ப்பாணம் குருநகர் சிறுத்தீவு பகுதிக்கு பல் கலைக்கழக மாணவர்கள் குழுவொன்று நேற்றுமுன் தினம் திங்கட்கிழமை சென்று சந்தோஷமாக பொழுதை கழித்துள்ள னர்.

ஒரு கட்டத்தில் கடலில் இறங்கிநீராடும்போது அரு கில் இருந்த கடலட்டைப் பண்ணைக்குள்ளும் நுழைந்துள்ளனர். அத னால் கடலட்டை பண்ணை யில் காவலில் இருந்தவர் களுக்கும் மாணவர்களுக் கும் இடையில் வாய்த் தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

வாய்த்தர்க்கம் முற்றி இரு தரப்பினரும் கைக லப்பில் ஈடுபட்டதில் 07 மாணவர்களும் கடலட்டை பண்ணை உரிமையாளர் ஒருவரும் பண்ணை பணி யாளர் ஒருவருமாக 09 பேர் காயமடைந்துள்ள னர்.

காயமடைந்தவர்கள் வைத்திய சாலையில் சிகி ச்சை பெற்று வரும் நிலை யில் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை முன்னெ டுத்துள்ளனர். (ம-7,33)

## விவசாய தொழிநுட்ப பயிற்சிப்பட்டறை

(யாழ்ப்பாணம்)

உயிர்த்தெழும் பூமி வேளாண்மை என்னும் தொனிப்பொருளில்திருநெல் வேலி விவசாயப் பயிற்சி நிலையத்தில் தொழிநுட்ப பயிற்சிப்பட்டறையொன்று இன்று புதன்கிழமை மற் றும் நாளை வியாழக்கி ழமை இடம்பெறவுள்ளது.

வடமாகாண பிரதி மாகாண விவசாயப்பணிப் பாளர் அஞ்சனா தேவி ஸ்ரீ ரங்கன் தலைமையில் ஆளவாழ்தல் அறக்கட் டளை நிறுவனத்தின் அனு சரணையுடன் இருநாள் தொழில்நுட்ப பயிற்சிப் பட்டறை நடைபெறவுள்ளது.

குறித்த நிகழ்விற்கு பிரதமவிருந்தினராக மாகாண விவசாயப் பணிப் பாளர் திருமதி.சுகந்தினி செந்தில்குமரன் கலந்து கொள்ளவுள்ளார்.

இப்பயிற்சிபட்டறையில் மண்ணைப் புதுப்பித்தல், நீர் முகாமைத்துவம், வினைத்திறனான சக்திப் பயன்பாடு பயிர் முகாமைத் துவம், அறுவடையும் அறு வடைக்குப் பின்னரான தொழில்நுட்பங்கள்,சந்தை முகாமைத்துவம் என பல கோணங்களில் புத்துயிர்ப் பூட்டும் விவசாயக் கருத்துக் களை விவசாய ஆர்வலர் களுக்கு வழங்கவுள்ளார்.

இத்தொழில்நுட்ப பயிற் சிப்பட்டறையில் விவசாயி கள் மற்றும் விவசாய ஆர் வலர்களை கலந்து பயன் பெறுமாறு அழைப்பு விடுக் கப்பட்டுள்ளது. (ம-7,104)

## சுகாதார அமைச்சரை மாற்றுவது தீர்வாகாது - நாமல் எம்.பி

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல் லவை மாற்றிபுதிய அமைச் சரை நியமிப்பது தீர்வா காது என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜ பக்ஷ தெரிவித்துள்ளார்.

நாட்டில் மருந்து வகை கள் தொடர்பில் எழுந்துள்ள சர்ச்சை நிலைமைகள் குறித்து அவர் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

சுகாதாரத்துறையில் ஏதேனும்மோசடிகள் இடம் பெற்றிருந்தால் விசாரணை நடத்தி சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என தெரிவித்துள்ளார். (ம-7)

# யாழில் 60க்கு மேற்பட்டோரிடம் போலி சாரதி அனுமதிப்பத்திரம்

## பொலிஸார் தேடுதல் வேட்டை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட் டத்தில் . சுமார் 60 க்கும் மேற்பட்டவர்களுக்கு போலி சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர்களையும் அவர்க ளுக்கு போலிசாரதி அனும திப்பத்திரம் வழங்கிய வலையமைப்பை சேர்ந்த வர்களையும் கைது செய் வதற்கு நீதிமன்ற அனும தியை கோரவுள்ளதாக யாழ்ப்பாண பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் போலி சாரதி அனுமதி பத்திரத்துடன் கடந்த 08 ஆம் திகதி இருவர் கைது செய்யப்பட்டனர். அதனை அடுத்து யாழ்.மாவட்ட மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தினருக்கு பொலிஸார் அறிவித்து இருந்தனர்.

அந்நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை போலி சாரதி அனுமதி பத்தி ரத்தை புதுப்பிக்க வந்த தெல்லிப்பளை பகுதியை சேர்ந்த நபர் ஒருவர் தொடர்பில் போக்குவரத்து திணைக்களத்தினர் பொலி ஸாருக்கு அறிவித்ததை அடுத்து பொலிஸார் அவரை கைது செய்திருந்தனர்.

அதேவேளை நேற்று முன்தினம் திங்கட்கி ழமையாழ்போதனா வைத் தியசாலை சிற்றூழியர் ஒருவரும், இன்னுமொரு வரும் போலி சாரதி அனு மதி பத்திரத்துடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்களிடம் பொலிஸார் தொடர் விசார ணைகளை முன்னெ டுத்து வரும் நிலையில் யாழ்ப்பாணத்தில் சுமார் 60 க்கும் அதிகமானோ ருக்கு போலி சாரதி அனு மதி பத்திரம் வழங்கப் பட்டுள்ளதாக பொலிஸா ருக்குத் தகவல்கள் கிடைக் கப்பெற்றுள்ளன.

சாரதி அனுமதி பத்தி ரத்திற்கான எழுத்து பரீட் சையில் இரண்டு தரம் தோற்றியும் சித்தியடைய தவறியவர்களை இலக்கு வைத்து கும்பல் ஒன்று செயற்பட்டு அவர்களிடம் அதிக பணத்தினை பெற்று போலி சாரதி அனுமதி பத்திரங்களை வழங்கி யுள்ளது.

குறித்த கும்பலுக்கும் மாவட்ட போக்குவரத்து திணைக்கள அதிகாரிக ளுக்கும் தொடர்பு இருக் கும் என தாம் சந்தேகிப் பதால் நீதிமன்ற அனுமதி யினை பெற்று மாவட்ட மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் ஒத்து ழைப்புடன் முழுமையான விசாரணைகளை முன்னெ டுத்து போலிசாரதி அனுமதி பத்திரத்தை வழங்கி வரும் கும்பலை கைது செய்யவுள் ளதாக பொலிஸார் தெரிவித் தனர். (ம-7,33,104)

## பொதுக்கூட்டம்

பொது முகாமைத்துவ உதவியாளர் சேவைச் சங்கம் பதிவு செய்யப்பட்டு 63 ஆண்டுகள் பூர்த்தி செய்வதுடன்,சங்கத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டம் நாளை வியாளக்கிழமை மு.ப 10.30 மணிக்கு A9 வீதியில் அமைந்துள்ள கிளிநொச்சி மாவட்ட கூட்டு றவு சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் புதிய நிர்வாகசபை உறுப்பினர்கள் தெரிவும் நடைபெறவிருப் பதனால் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அழை க்கப்பட்டுள்ளது. (ம-7)

## நூல் வெளியீடு

சிவா 100 ஆவண நூல் வெளியீட்டு விழாவானது நாளை வியாழக்கிழமை பி.ப 3 மணியளவில் கர வெட்டி.சம்பந்தர் கடையடி மகேசன் விளையாட்டுக் கழக மைதானத்தில் யாழ். பல்கலைக்கழக பேராசி ரியர் கு.மிகுந்தன் தலை மையில் இடம்பெறவுள் ளது. (நி-5-60)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும் விஜயன் வருகையிலிருந்து

## பொலநறுவை யுகம் முடியும் வரை- பகுதி I

19

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.



மகிந்தனுக்கு இரண்டு ஆண் பிள்ளைகளும் ஒரு பெண் பிள்ளையும் பிறந்தனர். மகன்கள் இருவரையும் ஆளுநர்களாக ஆக்கிய மகிந்தன், மகளை துணை அரசி என்ற நிலைக்கு உயர்த்தினான்.

இவன் காலத்தில் சோழ மன்னன் வல்லபன் படையெடுத்து வந்து நாகதீபத்தில் இறங்கினான். மகிந்தன் தனது வலிமையான படைகளை அனுப்பி அவனைத் தோற்கடித்தான். இதைத் தொடர்ந்து சோழ மன்னன், மகிந்தனுடன் ஒப்பந்தம் செய்து கொண்டான். இதனால், மகிந்தனின் புகழ் இந்தியா வரை பரவியது.

நான்காம் மகிந்தன் தனது 16 ஆவது ஆட்சியாண்டில் காலமானான். இவனுக்குப் பின்னர் இவனது கலிங்கத்து மனைவிக்குப் பிறந்த 12 வயது மகன் அரசனானான்.

### ஐந்தாம் சேனன் (கி.பி. 972-982)

ஐந்தாம் சேனன் என்பவன், அநுராதபுரத்தில் இருந்து இலங்கையை ஆண்ட சிங்கள மன்னர்களில் ஒருவன். நான்காம் மகிந்தனுக்குப் பின்னர் அரசனான இவன், கி.பி. 972 தொடக்கம் கி.பி. 982 வரை ஆட்சியில் இருந்தான்.

சேனன் அரியணை ஏறும் போது அவனுக்கு வயது 12. இவன் நான்காம் மகிந்தனுக்கும் கலிங்க அரசிக்கும் பிறந்த மூத்த மகன். இவன் தனது தம்பி உதயனை துணையரசன் ஆக்கினான். நான்காம் மகிந்தன் காலத்தில் படைத் தலைவனாக இருந்தவனே தொடர்ந்தும் படைத் தலைவனாக இருந்து வந்தான்.

ஒரு முறை படைத் தலைவன் கலவரம் ஒன்றை அடக்கச் சென்றிருந்த வேளை படைத் தலைவனின் தம்பியைக் கொலை செய்ததுடன், படைத் தலைவனை நீக்கி விட்டு தனக்குக் கீழ்ப்படிந்து நடப்பவனான அமைச்சன் ஒருவனைப் படைத் தலைவன் ஆக்கினான். கோபத்துடன் திரும்பி வரும் படைத் தலைவனுக்குப் பயந்த ஐந்தாம் சேனன் அநுராதபுரத்தை விட்டு ரோகணத்துக்குத் தப்பியோடினான்.

படைத் தலைவன் மீது கோபப்படாத கலிங்கத்து அரசி அவனை அழைத்துப் பேசினாள். அவளுடைய சம்மதத்துடன், படைத் தலைவன் அங்குள்ள தமிழர்களைக் கூட்டி நாட்டை அவர்களிடம் ஒப்படைத்து விட்டுப் புலத்தி நகரம் எனப்பட்ட பொலநறுவைக்குச் சென்று விட்டான். ஐந்தாம் சேனன் தனது படைகளைப் படைத் தலைவனுடன் போரிட அனுப்பினான். ஆனால் படுதோல்வி அடைந்தான். நாட்டைப் பெற்றுக் கொண்ட தமிழர் மக்களுக்குத் துன்பம் விளைவித்ததாகவும் மக்கள் ஐந்தாம் சேனனிடம் முறையிட்டதாகவும் மகாவம்சம் கூறுகிறது.

கூடாச் சேர்க்கையினால் அரசன் குடிப் பழக்கத்துக்கு அடிமையாகி இளம் வயதிலேயே தனது பத்தாவது ஆட்சியாண்டில் உயிர் நீத்தான். அவனுக்குப் பின்னர் அவனது தம்பி மகிந்தன் அரசனானான்.

### 5ஆம் மகிந்தன் (கி.பி. 982-1017)

ஐந்தாம் மகிந்தன் 11 ஆம் நூற்றாண்டில் அநுராதபுர மன்னராக இருந்தார். அவர் அநுராதபுர இராச்சியத்தின் கடைசி மன்னராக இருந்தார். ஐந்தாம் மகிந்தன், மன்னன் ஐந்தாம் சேனனின் சகோதரன். துரதிஷ்டவசமான காலத்தில் ஐந்தாம் மகிந்தன் நாட்டின் மன்னனாக முடிசூடினான். அவன் அரச விழுமியங்களை புறந்தள்ளி விட்டு அரசாண்டதாக மகாவம்சம் கூறுகிறது. இதன் காரணமாக மக்கள் வரி செலுத்தவில்லை என்றும் மகாவம்சத்தில் கூறப்பட்டுள்ளது.

குடிமக்கள் வரி செலுத்தாத காரணத்தினால், அரச கட்டமைப்பு சிக்கலாக மாறியது. மன்னனின் படையில் இருந்த வீரர்களுக்கு கொடுப்பனவுகள் வழங்குவது நிறுத்தப்பட்டன. எமக்கு உண்பதற்கு கொடுப்பனவு வழங்கவில்லை என்பதால் மன்னரை உண்ண விடுவதில்லை என்று கூறி படையினர் அரசனுக்கு எதிராக கிளர்ச்சியில் ஈடுபட்டனர். உணவு உற்பத்தி முற்றாக பாதிக்கப்பட்டது.

நாட்டு மக்களின் வறிய நிலை மேலோங்கியது. நாட்டில் ஆங்காங்கே பஞ்சத்தின் அச்சம் காரணமாக கலவரங்கள் வெடித்தன. இதனால் அச்சமடைந்த மன்னன் ருகுணை நோக்கி தப்பிச் சென்றான். அந்த சந்தர்ப்பத்தில் சோழ நாட்டு வர்த்தகர்கள் இலங்கைக்கு வந்து சென்று கொண்டிருந்தனர்.

இப்படி வந்த குதிரை வியாபாரி ஒருவன் இலங்கையின் நிலைமையை சோழ மன்னனுக்கு அறிவித்தான். இதுதான் இலங்கையை கைப்பற்ற சிறந்த சந்தர்ப்பம் எனக் கருதிய சோழ மன்னன் உடனடியாக இலங்கைக்கு படைகளை அனுப்பினான். அந்தப் படைகள் நேரடியாக ருகுணை நாட்டுக்கே சென்றன.

நாட்டுப் படையினர் மற்றும் மக்களால் பிரச்சினை [illegible] ருகுணையில் [illegible] இருந்த மகிந்தனுக்கு சோழ நாட்டின் படையினர் செய்தி ஒன்றை அனுப்பினர். மன்னனின் அரசாட்சியை பாதுகாக்க உதவிகளை செய்யும் உடன்படிக்கையில் கைச்சாத்திட சோழ மன்னன் விருப்பத்துடன் இருக்கின்றார் என்பதே அந்த செய்தி.

மன்னன் ஐந்தாம் மகிந்தன் இதனை நம்பினான். தலைமறைவாக இருந்த இடத்தில் இருந்து வெளியில் வந்தான். சோழப்படையினர் மகிந்தனின் முடியை கைப்பற்றி, மன்னனை சோழ நாட்டுக்கு கொண்டு சென்றனர். சோழர்கள் இலங்கையை கைப்பற்றி ஆட்சி செய்தனர். ஐந்தாம் மகிந்தன் சோழ நாட்டில் கைதியாக 1029 இல் உயிரிழந்தான்.

இதன் பின்னர் ராஜராஜ சோழனது ஆதிக்கம் இலங்கையில் ஏற்பட்டமையினைத் தொடர்ந்து இராசதானி பொலநறுவைக்கு இடம்மாற்றப்பட்டது.

### அநுராதபுர காலத்தில் பயன்படுத்தப்பட்ட நாணயக் குத்திகள்



கஹபான நாணயக் குத்திகள்

நன்றி-CBSL

அநுராதபுர காலத்தில் பயன்படுத்தப்பட்ட நாணயக் குத்திகளின் பிரதானமானவற்றை பின்வருமாறு வகைப்படுத்தலாம். அவை கஹபான, சுவாஸ்திக நாணயக்குத்தி, பிடரி மயிர் இல்லாத சிங்க நாணயக் குத்திகள், லக்ஷ்மி பளிங்குக்கல், கஹவானு அல்லது லங்கேஸ்வரர் நாணயக்குத்தி மற்றும் வெளிநாட்டு நாணயக்குத்தி என்பனவாகும்.

### கஹபான நாணயக்குத்திகள்

மிகப் பழைய நாணயக் கூறு என இத்தீவில் அறியப்பட்டது கஹபான (கர்ஷபான) ஆகும். இவை சமஸ்கிருதத்தில் புராண எனவும் ஆங்கிலத்தில் எல்டிங்கஸ் எனவும் அழைக்கப்பட்டன. இவை பொதுவாக துளை அடையாளமிடப்பட்ட குத்திகள் என அறியப்பட்டன. குத்தியின் ஒரு பக்கத்திலோ அல்லது இரு பக்கங்களிலோ ஓர் அடையாளக் குறி குத்தப்பட்டுள்ளது. கஹபான பண்படுத்தப்பட்ட உலோகத் தகட்டில் கீறுகள் ஏற்படுத்தப்பட்டு உற்பத்தி செய்யப்பட்டதென நம்பப்படுகின்றது. அறியப்பட்ட அத்தகைய குத்திகள் வட்டம், சதுரம், செவ்வகம், நீண்ட செவ்வகம் போல பல வடிவங்களை உடையது. கஹபானவின் லோகம் பெருமளவுக்கு வெள்ளியாகவே இருந்தது.

இந்த நாணயங்கள் ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு கைமாறும் போது பல்வேறு வகையான தனித்துவமான அடையாளங்கள் நாணயத்தின் மீது குறிக்கப்பட்டன. இதனால், இந்நாணயங்கள் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்ட பல அடையாள்ங்களைக் கொண்டிருக்கின்றன. அத்தகைய ஒரு நாணயத்தில் ஏறக்குறைய 20 அடையாளங்கள் இடப்பட்டுள்ளன. சூரியன், சந்திரன், யானை, நாய், மரம் ஆகியன அத்தகைய அடையாளங்களில் சிலவாகும்.

(தொடரும்...)



கி.மு 3ம் நூற்றாண்டு புராண நாணயக்குத்திகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதி...

கொள்ளவுள்ளதாக இந்திய வெளியுறவுத்துறை அமைச்சு நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

ரணில் விக்கிரமசிங்க இலங்கையின் ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர் இந்தியாவிற்கு மேற்கொள்கின்ற முதலாவது விஜயமாக இது அமையவுள்ளது.

ஜனாதிபதி தனது விஜயத்தின் போது இந்திய குடியரசுத் தலைவர், பிரதமர் மற்றும் முக்கிய தலைவர்களை சந்தித்து இரு தரப்பினருக்கும் முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் குறித்து கலந்துரையாடவுள்ளதாக இந்திய வெளியுறவுத்துறை அமைச்சு நேற்று பிற்பகல் அறிவித்துள்ளது. (ம-7)

## தமிழ்க் கட்சி...

அமைச்சரவையின் வாராந்த முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பானது, அரச தகவல் திணைக்களத்தில் நேற்று மதியம் இடம்பெற்றது.

இதில் கருத்துத் தெரிவிக்கும்போது பந்துல குணவர்த்தன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

13ஆவது திருத்த சட்டத்தை அமுல்படுத்தக்கோரி பாரத பிரதமர் மோடிக்கு தமிழ்க் கட்சிகள் கடிதம் அனுப்பியுள்ள நிலையில் அமைச்சர் பந்துல குணவர்த்தன மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (ம-7)

## புதிய பயங்கர...

பின்போதே ஜனாதிபதி இந்த உறுதியை வழங்கியுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்வரும் 21ஆம் திகதி இந்தியாவுக்கான உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார்.

இந்த நிலையில், நேற்று பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழ் மக்கள் கூட்டணி, ஈ.பி.ஆர்.எல்.எப்., ரெலோ, புளொட் உள்ளிட்ட கட்சிகளின் பிரதிநிதிகளுடன் ஜனாதிபதி விசேட கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

இதன்போது கருத்து வெளியிட்ட ஜனாதிபதி, புதிய பயங்கரவாதத் திருத்தச்சட்டம் உரிய திருத்தங்களுடன் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் என தமிழ்ப் பிரதிநிதிகளிடம் உறுதியளித்தார்.

புதிய பயங்கரவாத சட்டமூலம் குறித்த அரசாங்கத்தின் நிலைப்பாட்டை தமிழ்க் கட்சிகளிடம் தெரிவித்த ஜனாதிபதி, திருத்தங்கள் குறித்து ஆராய்ந்து உரிய நடவடிக்கைகள் எடுத்த பின்னர் குறித்த சட்டமூலம் மீண்டும் வர்த்தமானியில் வெளியிடப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

புதிய பயங்கரவாத சட்டமூலம் தொடர்பான வரைவுக் குழு, ஐரோப்பிய ஒன்றியத்தின் முன்மொழிவுகளை மதிப்பாய்வு செய்ய உள்ளதாகவும் தமிழ் கட்சிகளிடம் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7)

## அரசியல் தீர்வு...

இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் மக்கள் கூட்டணி, ஈ.பி.ஆர்.எல்.எப், ரெலோ, புளொட் உள்ளிட்ட கட்சிகள் கலந்து கொண்டன.

இச்சந்திப்பில் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எவ்விதமாக கருத்தையும் முன்வைக்கவில்லை. (ம-7)

## இரு தமிழ்...

சண்முகரட்ணம் சண்முகராஜன் 200 வருடம் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட கிளிநொச்சியைச் சேர்ந்த செல்லையா நவரட்ணம் ஆகியோரே விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரித்தானியாவுக்கு பயணித்திருந்தபோது இடம்பெற்ற முக்கிய சந்திப்பில் அனைத்து அரசியல் கைதிகளையும் விடுவித்து அரசாங்கம் நல்லெண்ணத்தை வெளிப்படுத்த வேண்டும் என லைக்கா குழுமத்தின் நிறுவனரும், தலைவருமான அல்லிராஜா சுபாஸ்கரன் ஜனாதிபதியிடம் வலியுறுத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## பட்டமளிப்பு...

களில் நடைபெறவுள்ளது.

பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் எட்டு அமர்வுகளாக நடைபெறவுள்ள இந்தப் பட்டமளிப்பு விழாவை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வேந்தர், வாழ்நாள் பேராசிரியர் சி.பத்மநாதன் தலைமைதாங்கி பட்டங்களையும், தகைமைச் சான்றிதழ்களையும், தங்கப் பதக்கங்களையும், புலமைப் பரிசில்களையும் வழங்கிக் கௌரவிக்கவுள்ளார். (ம-7)

## முல்லையில்...

ஓட்டையிலிருந்து நீர் கசிந்து படகு மூழ்கியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில் உயிரிழந்தவரின் சடலம் முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை முல்லைத்தீவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(ம-7)

## பலாலி...

விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இந்த விடயம் தொடர்பில் துறைமுகங்கள், கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் பந்துல முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதற்கமைய யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்திற்கான வரி தொடர்பில் கால அவகாசம் நீடிப்பதன் மூலம் யாழ் விமான நிலையத்துக்கு ஊடாக பயணிக்கும், பயணிகள் மலிவு விலையில் விமான ரிக்கெட்டுக்களை வாங்க முடியும் எனவும் மேலும் இது யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையத்தை மேம்படுத்தும் என்றும் அமைச்சர் பந்துல குணவர்த்தன கூறியுள்ளார். (ம-7)

## பெற்...

வீசப்பட்டுள்ளது.

முகத்தை துணியால் மறைத்தவாறு இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்த ஆறு பேர் குறித்த வீட்டில் ஜன்னல், கதவு என்பவற்றை அடித்து உடைத்து பெற்றோல் குண்டு வீசி வீட்டின் பல பொருட்களை எரித்து சேதமாக்கியுள்ளனர்.

வீட்டில் இருந்த 42 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தாயார் ஒருவர் பலத்த காயங்களுக்குள்ளாகி அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-7)

# சபைக் காலத்தை விரயமாக்காதீர்

### மனுஷ நாணயக்கார

சில்லறைத்தனமான அரசியல் நடவடிக்கைகளுக்காக பாராளுமன்றின் காலத்தை விரயமாக்க இடமளிக்க வேண்டாம் என தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார கோரிக்கை விடுத்துள்ளார்.

சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தனவிடம் இந்த கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று பாராளுமன்றம் கூடியபோது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நிகழ்ச்சி நிரலுக்கு புறம்பான வகையில் பல்வேறு கேள்விகளை எழுப்பியிருந்தார்.

இந்நிலையில், இது தொடர்பில் பாராளுமன்றில் மனுஷ நாணயக்கார கருத்து வெளியிட்டபோதே இதனை தெரிவித்துள்ளார். (ம-7)





































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

DTPE CAMPUS

## 2023 – ஆகஸ்ட் மாதத்திற்கான பட்டப்படிப்புகள் புதிய பிரிவுகள் ஆரம்பம்

**MBA - Master of Business Administration**

கால அளவு : 01 வருடம்

நுழைவுத் தகைமை : ஏதேனும் Bachelor Degree அல்லது முகாமைத்துவ துறையில் 05 வருடங்களுக்கு குறையாத அனுபவம்

**BBA - Bachelor of Business Administration** | **B.A in English** | **B.Eng in Civil Engineering**

கால அளவு : Final year Direct Entry

நுழைவுத் தகைமை : HND / Advanced Diploma அல்லது Diploma உடன் சம்பந்தப்பட்ட துறையில் 2 வருடங்களுக்கு மேற்பட்ட தொழில் அனுபவம்.

நேரடி மற்றும் online வகுப்புகள் (யூலை மாதத்திற்குள் பதிவு செய்பவர்களுக்கு விசேட கட்டண கழிவு உண்டு.)

- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்ட கற்கைநெறிகள்
- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பிற்கும், மேற்கத்திய நாடுகளுக்கு இடம் பெயர்வதற்கான (migration) ஏற்ற வகையில் Wes அங்கீகாரம்.
- அரச பல்கலைக்கழக மற்றும் அரச உயர்கல்வி நிறுவன விரிவுரையாளர்களால் விரிவுரைகள் நிகழ்த்தப்படுகிறது.

(16320)

No. 925, K.K.S Road, தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல. 021 468 0964, 077 543 8086



வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (16288)

076 825 7716 (ஆகாஸ்)



## கணக்கீட்டு துறையில் வேலைவாய்ப்பு

**ACCOUNT VIVA (PVT) LTD**

நிதி, வரி ஆலோசனைகள் எமது நிறுவனத்திற்கு கணக்கீடு, கணக்காய்வு வேலையாட்கள் தேவை.

தகைமை (பட்டதாரிகள் HNDA, AAT, A/L)

வட மாகாணத்தின் எல்லா மாவட்டமும் (16336)

தொடர்பு : 077 694 4543



## மேட்டுக்காணி விற்பனைக்குண்டு

கிளாலிச் சந்தியிலிருந்து புலோப்பளைப் பக்கமாக ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் ஆறு ஏக்கர் தென்னம் பிள்ளை வைப்பதற்கு சாதகமான மேட்டுக்காணி நான்கு பக்கமும் தூண்கள் போடப்பட்டு ஏழு வரி முட்கம்பிகளால் அடைக்கப்பட்டு கேற்றும் போடப்பட்டுள்ளது. இக்காணி விற்பனைக்குண்டு.

(16330) 077 649 1027



## VILLAGE HOTEL JAFFNA EXPRESS

யாழ் - கொழும்பு பஸ் சேவை

AIRPORT PICK UP DROP SERVICE

அன்னை முத்துமாரி பஸ் சேவை இனி வரும் காலங்களில் VILLAGE HOTEL எனும் பெயரில்...

கட்டணம் - 2800/=

(16033)

T.P:077 544 8503



## பாஸ்போட்

ஒன்லைன் முற்பதிவு செய்து தரப்படும்.

ஒரு பதிவுக்கு 500/-

(C-6937)

076 037 3294



## குத்தகைக்குத் தேவை

வான்கள்/கார்கள் குத்தகைக்குத் தேவை தகுந்த பெறுமதி வழங்கப்படும்

(16334)

077 971 5379



## பாதுகாப்பானதும் உறுதியுமான...

பாதுகாப்பானதும் உறுதியுமான முறையில் தொழில்சார் முகவர் மூலம் வெளிநாடு செல்ல வேண்டுமா?

Study Visa
Family Visa
Tourist Visa

மேலும்...

Grammar, Functions, Vocabulary மற்றும் IELTS பரீட்சை நுணுக்கங்களுடன் IELTS பயிற்சி நெறிகள். புது அனுபவத்தினையும் 6.5 ற்கு மேற்பட்ட புள்ளிகளையும் பெறுங்கள்

(16229)

439, Temple Road, Nallur
+94 777 687 821

சேவை அனுசரணையாளர்
RAJEEVAN SP
spraj54@gmail.com



## WORK IN CANADA WORK PERMITS

COMPUTER TECHNICIANS

COMPUTER சம்பந்தமான DEGREE ,DIPLOMA படித்தவர்களுக்கும் COMPUTER HARDWARE, NETWORKING துறைகளில் வேலை அனுபவம் உள்ளவர்களுக்கும் பொருத்தமான வேலை வாய்ப்புக்கள்

- ✓ 2 YEAR WORK PERMITS
- ✓ குடும்பத்தவர்களை உடன் அழைத்துச் செல்லும் வாய்ப்பு
- ✓ 2 வருடத்தின் பின் நிரந்தர வதிவிடவுரிமை (Permanent Resident)

(C-6938)

CIMS COLLEGE 0777-068-777



## WORK IN UK WORK PERMITS

CIVIL ENGINEERS

CIVIL ENGINEERING சம்பந்தமான DEGREE ,DIPLOMA படித்து CIVIL ENGINEERING துறைகளில் வேலைசெய்பவர்களுக்கு பொருத்தமான வேலை வாய்ப்புக்கள்

- ✓ 5 YEAR WORK PERMITS
- ✓ குடும்பத்தவர்களை உடன் அழைத்துச்செல்லும் வாய்ப்பு
- ✓ 5 வருடங்களின் பின் நிரந்தர வதிவிடவுரிமை (Permanent Resident)

(C-6939)

CIMS COLLEGE 0777-068-777


# மரண அறிவித்தல்

## திரு.அரியரத்தினம் மகேந்திரராஜா

(ஓய்வு பெற்ற பாடசாலை வேலை பரிசோதகர் – வலயக்கல்வி பணிமனை, பட்டிருப்பு)



தோற்றம் : 06.03.1980 மறைவு : 18.07.2023

பொற்பதி வீதி, கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கல்லடி மட்டக்களப்பு, மருதனார்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. அரியரத்தினம் மகேந்திரராஜா அவர்கள் 18.07.2023 நேற்று செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற அரியரத்தினம் - பாக்கியம் தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற சின்னையா - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் கலாரஞ்சினியின் அன்புக் கணவரும் அனுசன், அனோஜா, டினேசன் ஆகியோரின் அன்புத் தந்தையும் நிரோசன், கலைவாணி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் அக்சரன், அனன்யா, அஷ்மிதா ஆகியோரின் அன்புப் பேரனும் சிறிஸ்கந்தராசா, Dr.மனோகரன், கருணாகரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்றவர்களான இராமச்சந்திரன், சிவேந்திரன், லீலாவதி, யோகராணி, மனோரஞ்சிதம், சுந்தரநேசன் மற்றும் சிவலிங்கம், பலாலச்சந்திரன், சத்தியமூர்த்தி, செல்வரஞ்சிதம், சிவநேசன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 19.07.2023 புதன்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோண்டாவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மருதனார்மடம்,
யாழ்ப்பாணம். 021 224 2114 (16327) தகவல்:- குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

தோற்றம் 10 . 04 . 1968



மறைவு 17 . 07 . 2023

## திரு.வேலாயுதம் சிவசக்திவேல்

(பிரதி அதிபர் – யா/இணுவில் இந்துக் கல்லூரி, முன்னாள் அதிபர் –யா/ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம், முன்னாள் அதிபர் – யா/பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம்)

யாழ். சண்டிலிப்பாய் மத்தியைப் பிறப்பிடமாகவும் கோண்டாவிலினை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. வேலாயுதம் சிவசக்திவேல் நேற்றுமுன்தினம் (17.07.2023) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாயுதம் - இராசமலர் தம்பதிகளின் அன்பு மகனும் இராசையா(ஓய்வுபெற்ற நில அளவையாளர்) - இந்திராணி தம்பதிகளின் பாசமிகு மருமகனும் ஆனந்தஜோதியின்(ஆசிரியை - யாழ்.இந்துக் கல்லூரி, முன்னாள் ஆசிரியை - யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), அன்பிற்குரிய கணவரும் ஆரணி(மாணவி- யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), சாத்விகன்(மாணவன்-யாழ்.இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசத்துக்குரிய தந்தையும் காலஞ்சென்ற சந்திராதேவி மற்றும் இந்திராணி, சிவபாலன்(ஓய்வுபெற்ற வங்கி முகாமையாளர் - இலங்கை வங்கி), சிவகுமாரன்(ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர்(கணிதம்) - வலிகாமம் கல்வி வலயம்), சித்திராதேவி(கொலன்ட்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜோதிமாலா(ஜேர்மனி), கிருஷ்ணஜோதி(நோர்வே) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (20.07.2023) வியாழக்கிழமை பி.ப 1.00 மணியளவில் கோண்டாவிலில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோண்டாவில் கிழக்கு கட்டையாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புகையிரத நிலைய வீதி,
கோண்டாவில். 074 124 6236 (16325) தகவல்:- குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினரால் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.07.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.